நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



மாசிலாத கங்கையைப்போல் ஆறு மில்லையே
வழிநடந்து செல்வோர் அன்புக் கெல்லை யில்லையே.
காசியிலே காட்சிதரும் விசுவ நாதனைக்
கையெடுத்துக் கும்பிட்டால் கவலை இல்லையே.

அக்டோபர் 1990

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 9

ஆசிரியர்
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

பிரமோ தூத புரட்டாசி

அக்டோபர் 1990

நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் - நானே
அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு.
— அருட்பிரகாச வள்ளற் பெருமான்.

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

செய்தித் துணுக்குகள்

நகரத்தாரில் முதன் முதலில் மீசை வைத்துக்கொண்டவர் பிச்சப்பா சுப்பிரமணியம்.

பெரிய புராணம், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசை ஞானியார் (சுந்தர மூர்த்தி சுவாமிகளின் தாயார்) ஆகிய மூன்று பெண்களைப் பற்றிக் கூறுகிறது.

கொத்தமங்கலத்திலும் தேவகோட்டையிலும் சேக்கிழாருக்குச் சன்னதி இருக்கிறது.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

நகரத்தார்கள் அந்தக் காலத்தில் குடுமி வைத்திருந்தார்கள். ஆச்சிமார்கள் அதைப் பிடித்துக் கொண்டதால் அது பின்னர் கிராப்பு ஆயிற்று.

தன் மகள் சொல்வதை மாப்பிள்ளை கேட்கவேண்டும் என்றும் தன் மகன் சொல்வதை மருமகள் கேட்கவேண்டுமென்றும் இப்போது நம்மவர்கள் நினைக்கிறார்கள்.

— கரு. முத்தையா

''கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்'' என்று அந்தக் காலத்தில் சொல்வார்கள். ஆனால் இப்போது ''கள் ஆனாலும் கணவன் ஃபுல் ஆனாலும் புருஷன்'' எனச் சொல்லலாம்.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சியில் நடைபெற்ற வழக்காடு மன்றத்தில்.)

மூன்று முறை ஒலிக்கும் சங்கு

ஒரு மனிதனின் வாழ்வில் மூன்று முறை சங்கு ஒலிக்கிறது. அமுதூட்டும்போது முதல் சங்கும் திருமணத்தின்போது இரண்டாவது சங்கும் இறுதிப் பயணத்தின் போது மூன்றாவது சங்கும் ஒலிக்கின்றன.

- பழ. கருப்பையா

(பட்டினத்தடிகள் திருவிழாவில்.)

பட்டுச் சேலை கட்டாத ஆச்சி!

திரு. பழ. கருப்பையாவின் மனைவி திருமதி கமலம் ஆச்சி பட்டுச் சேலையே கட்டுவது இல்லை. ஆயிரக்கணக்கான பட்டுப் பூச்சிகளைக் கொன்று உருவாக்கப்படும் அதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது என்பதற்காகவே அவர்கள் பட்டுச் சேலை கட்டுவது இல்லை.

- எஸ்வி. ஆர். ஆவுடையப்பன்

(பட்டினத்தடிகளின் 6 ஆம் திருநாள் பேரவை நிகழ்ச்சியில்)

கோவிலூர் சுவாமிகள் வருகை

பட்டினத்தடிகளின் குருபூஜையன்று (5-8-90) கோவிலூர் ஆதீன கர்த்தர் தவத்திரு காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள் காவிரிப்பூம்பட்டினத்திற்கு பகல் 12-15 மணி அளவில் வருகை தந்தார்கள். அப்போது அவர்களுக்கு நகர விடுதியில் பூர்ண கும்ப மரியாதை செய்யப்பெற்றது. பொன். புதுப்பட்டி நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார்கள்.

"சீதனம் கொடுப்பது தவறல்ல!"

நாம் முன்பு வாழ்ந்த 20 ஊர் களில் இப்போது யாரும் இல்லை. 76 ஊர், பழைய 96 ஊர் ஆக வேண்டும். வாழ்வதற்குப் பாது காப்பு இல்லாததால் வலசை செல்ல கட்டாயம் ஏற்படுகிறது.

ஒரு மனிதன் பிறப்பினுல் தள்ளி வைக்கப்படுவது கொடுமை. நம் இளைஞர்கள் மேற்கல்வி பெற முடியாது அல்லற்படுகின்றனர். சட்டத்தின் அமைப்பு அப்படி



இருக்கிறது. நகரத்தாராக இருப் பது நம் நாட்டில் குற்றம். திறமைக்கான அறிவு நம்நாட்டில் குன்றி விட்டது.

நகரத்தார் பெண்களின் பேச்சு மாறி வருகிறது. பழக்க வழக்கங் கள் மாறி வருகின்றன. ஆண் களுக்குப் பிறப்பாலே சுமை இருக் கிறது. பெண்களுக்குத் திருமணம் ஒரு சுமை. பட்டுக் கயிறு கட்டி யிருந்தால் பயல் எழுபதாயிரம் கேட்கிருன்.

மாமியார் சாமான், சீதனம் இப்போது கொடுக்கப்படுவதைப் பார்த்தால் பணத்துக்காக நாமும் இன்னெரு திருமணம் செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படும். முதல் பிள்ளை பெண் என்ருல் இரண்டாவது வருஷம் சாமியார் தான். சீதனம் கொடுப் பது தவறல்ல! ஆனுல் இந்த மாமியார் சாமான் எதற்காக? மனிதன் ஏறுவான்; இறங்குவான். இறங்கிய நேரத்தில் சீதனம் உத வும். அது பெண்களுக்குப் பாது காப்பு நிதி! மாமியார் சாமான் வாங்கி 16 பட்டுச் சேலைகளை எடுப்பது எதற்காக?

பசியும் காமமும் எல்லா உயிர் களுக்கும் உண்டு. அவை உயி ரோடு இணைந்த இயல்புகள். பதின்மூன்று வயதில் சமைந்த பெண்ணுக்கு 28 வயதில் கூட திருமணம் செய்து வைக்காமல் அப்படி என்ன வேலை? அரசு தான் நம்மைக் கொடுமைப்படுத்துகிறது என்ருல் நீங்களுமா?

- பழ. கருப்பையா

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத் தடிகளின் 6 ஆம் திருநாளன்று (1-8-90) பேரவை நிகழ்ச்சியில்)

திருமணம்

ஆத்தங்குடியைச் சேர்ந்த அரசு நாச்சியப்பன் அவர்களது புதல்வி செல்வி நாச்சம்மை என்கிற இந்தி ராவுக்கும் ஆத்தங்குடி என். முத்து அவர்கள் புதல்வன் செல்வன் கண்ணன் B. A., C. S. க்கும் 3-9-90 அன்று ஆத்தங்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற் றது. திருமணத்தில் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான வாழப் பாடி திரு. கே. இராமமூர்த்தி அவர்களும் கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

காரைக்கால் அம்மையாரின் சிறப்பு

63 நாயன்மார்களின் சரித்திரத்தை எழுதிய சேக்கிழார் பெரிய புராணத்தில் பட்டினத்தார் பற்றிப் பாடவில்லை. ஏனென்ருல் பட்டினத்தாரை அவர் சித்தராகக் கருதினுர்.

மற்றவர்கள் பாடியது திருப்பதிகம். காரைக்கால் அம்மையார் பாடியது மூத்த திருப்பதிகம்.

கோயில்களில், 81 வயது வாழ்ந்த அப்பர் சுவாமிகளும் மற்ற நாயன்மார்களும் நிற்க காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்த கோலத்தில் இருக்கிருர்.

— காசிஸ்ரீ அரு. சோ.

(காவிரிப்பூம்பட்டினம் பேரவை நிகழ்ச்சியில்.)

தமிழை வளர்க்கும் பண்பாட்டுப் பேரவை

வங்கியில் பணியாற்றிக் கொண்டே தமிழை வளர்க்கும் அரிய பணியினை, 'மதுரை வங்கி பண்பாட்டுப் பேரவை' என்ற அமைப்பின் மூலம், மதுரை வங்கியினர் செயல்படுத்தி வருகின்றனர். இவர்கள் பாரதிதாசன் நூற்ருண்டு விழாவினையொட்டி "பாரதிதாசன் படைப்புகளில் தமிழுணர்வே விஞ்சி நிற்க சமுதாய உணர்வே விஞ்சி நிற்கிறது என்பது குற்றம்" என ஓர் வழக்காடு மன்றத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர். சிலம்பொலி திரு. செல்லப்பன் தலைமையில் இவ்விழா 19-7-90 அன்று நடந்தேறியது.

இவ்விழாவினையொட்டி மதுரை வங்கியின் வழக்கறிஞராக இருந்து, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப் பெற்றிருக்கும் திரு. ஏ.ஆர். லெட்சுமணன் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

திருமணம்

காவிரிப்பூம்பட்டினத்துக் கதா நாயகர் காரைக்குடி பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியாரவர்கள் புதல்வி செல்வி நாகம்மை B. Sc, B. Ed க்கும் ஆவினிப்பட்டி மு. பழ. முத்துராமன் செட்டியாரவர்கள் புதல்வன் செல்வன் முத்தையா என்ற செல்வம் B. Sc க்கும் காரைக்குடியில் 24-8-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்தையொட்டி 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் விகடம் காசிச் செட்டியார் அவர்கள் முன்னிலையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. பலர் வாழ்த்திப் பேசினர்கள்.

மணமக்களுக்கு காவிரிப்பூம்பட்டினம் பல்லவனம், சாயாவனம் கோயில்கள் சார்பாகப் பிரசாதங்கள் வழங்கப் பெற்றன.

மேற்படி பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் அருணாசலம் என்ற மருதவாணன் (B. Com) க்கும் இராங்கியம் முப. கரு. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி முத்துக்கருப்பி என்ற திலகத்திற்கும் இராங்கியத்தில் 26-8-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

நவராத்திரி விழா

காரைக்குடி முத்துப்பட்டணம் மீனாட்சி அம்மன் கோயிலில் நவராத்திரி விழாச் சிறப்பாக நடைபெற்றது. கலாமடம் - பாதரக்குடி ஆதீனம் திரு. இரவீந்திர சுவாமிகள் சண்டி ஹோமம் நடத்தினர்கள். 24-9-90 அன்று 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் நவராத்திரி மகிமை பற்றிப் பேசினர். திரு. இரவீந்திர சுவாமிகள் தேவி பாகவதம் பற்றி உரையாற்றினர்கள்.

நாங்கள் ரூ. 1,00, 000 ரூ. 50,000 சீட்டு குரூப்புகளைக் கீழ்க்கண்ட முறையில் நடத்தி வருகிறோம்.

மாதம்	சந்தா	சீட்டுத் தொகை
	ரூ	ரூ.
25	4000	1 00.000
20	2500	50,000

ஸ்ரீ காந்திமதி சிட் பண்ட்ஸ்

95, வக்கீல் புதுத் தெரு. மதுரை-625 001.

போன் : 22298

திருச்செந்தூர் ஸ்கந்தர் சஷ்ட்டி சூரசம்ஹார ஸ்பெஷல் பஸ் பிரயாணம்

24-10-90 ஐப்பசி மீ 7 உ. புதன்கிழமை ஒருநாள்

அதிகாலை 3 மணிக்குப் புறப்பட்டு திருச்செந்தூர் சென்று செந்திலதிபரை தெரிசித்து சூரசம்ஹாரம் பார்த்து இரவு திரும்புதல்.

நபர் 1க்கு பஸ் கட்டணம் மட்டும் ரூ. 45/-
முழுத் தொகையும் செலுத்தி டிக்கட் பதிவு செய்யவும்.

சபரிமலைப் பயணம்
கார்த்திகை மாதப் பிறப்பு தரிசனம்

17-11-90 & 18-11-90 சனி, ஞாயிறு 2 நாள்

மதுரை - குற்றாலம் - ஆரியங்காவு - பம்பை - சபரிமலை - செங்கோட்டை - மதுரை.

நாள் 2க்கு நபர் 1க்கு பஸ் கட்டணம் சாப்பாடு உள்பட ரூ. 165/- அட்வான்ஸ் ரூ. 75/- வீதம் செலுத்தி டிக்கட் பதிவு செய்யவும்.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

9. வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1 31168

பெரிய புராணம்

அடியார்களைப் பற்றியது பெரிய புராணம். கும்பிடுவது அடியார்களைச் சேர்ந்தது. அதை இப்போது அரசியல்வாதிகள் செய்து வருகிறார்கள்.

பெரிய புராணம் எழுதப்பட்டு 800 ஆண்டுகளாகின்றது. குன்றத்தூரில் பிறந்த, தொண்டை நாட்டில் முதலமைச்சராக இருந்த சேக்கிழார் இதை எழுதினார்.

சேக்கிழார் 4286 பாடல்களைப் பாடினார். பெரிய புராணத்தை எழுத ஓராண்டும் அதை அரங்கேற்றம் செய்ய ஓராண்டும் ஆயின. சேக்கிழாருக்கு 'தொண்டர் சீர் பரவுவார்' என மகாராஜா பட்டமளித்தார். சைவர்களுக்கு உரிய நூல் பெரிய புராணம் கடவுளுக்குச் செய்த தொண்டு, அடியவர்களுக்குச் செய்த தொண்டு இரண்டையும் பற்றியது பெரிய புராணம்!

— காசிஸ்ரீ அரு. சோ.

(காவிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழா பேரவை நிகழ்ச்சியில்.)

மணி விழா

கொத்தமங்கலம் மு. சுப. அருணாசலம் செட்டியார் அவர்களுக்கும் திருமதி அரு. வள்ளியம்மை ஆச்சி அவர்களுக்கும் 7-9-90 அன்று கொத்தமங்கலத்தில் 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழாச் சிறப்பாக நடைபெற்றது.

இராமேஸ்வரம் - காசி நடைப் பயண நூல்

13 பேர் கொண்ட குழுவிற்குத் தலைமையேற்று இராமேஸ்வரத்திலிருந்து முதல் நடைப் பயணமாக 17-2-1983 அன்று புறப்பட்டு 116 நாட்களில் 2000 மைல்கள் நடந்து 12-6-1983 அன்று காசிக்கு இனிதே சென்று வழிபட்ட அனுபவங்களை 'பொற்கிழிக் கவிஞர்' 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் ''இராமேஸ்வரம் - காசி நடைப் பயணம்'' என்ற தமது நூலில் விரிவாக எழுதியிருக்கிறார். இந்திய தேசிய ஒருமைப் பாட்டின் முழு வடிவமானது இந்த நூல்.

திருத்தணிப் பாதயாத்திரைக் குழு சார்பாக சென்னையில் 1986ல் நடைபெற்ற 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. வின் பொன் விழாவில் இந்த நூல் (தமிழ்ப் பதிப்பு) வெளியிடப் பெற்றது.

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இந்த நூலுக்கு முதல் பரிசு வழங்கியது. (பரிசினை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில் தமிழக முதல்வர் திருமதி ஜானகி இராமச்சந்திரனிடமிருந்து திரு. அரு. சோ. பெற்றார்.)

தமிழக அரசு இந்த நூலில் ஆயிரம் பிரதிகள் வாங்கி எல்லா அரசு நூலகங்களுக்கும் வழங்கியுள்ளது.

ரூ. 50/- விலையுள்ள இந்த நூல் இரண்டு பதிப்புகளாக 4000 பிரதிகள் அச்சாகி விற்பனையாகி உள்ளது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. திருமணப் பரிசாக அளிக்கத் தகுந்த நூல் இது.

இதன் தெலுங்குப் பதிப்பு இராமேஸ்வரம் - காசி இரண்டாம் நடைப் பயணத்தின்போது ஹைதராபாத் - செகந்தராபாத் நகரத்தார் சங்கத்தின் சார்பாக ஹைதராபாத்தில் நடைபெற்ற விழாவில் இந்து அறநிலையத்துறை ஆணையாளர் திரு. பாபுரெட்டி I. A. S. அவர்களால் வெளியிடப் பெற்றது.

இந்த நூல் இந்தி, கன்னடம், மலையாளம் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாராகி வருகிறது. விரைவில் அந்தந்த மாநிலத் தலைநகரங்களில் வெளியிடப்பட உள்ளது.

நேமம் கோயில் அறங்காவலர்கள்

நகரக் கோயில்கள் ஒன்பதில் ஒன்றான நேமம் அருள்மிகு ஸ்ரீ ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் - சௌந்தரநாயகி அம்பாள் கோயிலில் நடப்பு அறங்காவலர்களாக நெற்குப்பை திரு. ப. ராம. லெ. ராம. லெட்சுமணன் செட்டியார் மேப்பட்டியூர் திரு. சுப. பழ. பட்டாபிராமன் செட்டியார் மேலைச்சிவபுரி திரு. ராம. மு. தியாகராஜன் செட்டியார் மேப்பட்டியூர் திரு. ராம. சுப்பையா செட்டியார் கீழச்சிவல்பட்டி திரு. பெ. மு. கரு. முத்தப்ப செட்டியார் ஆகிய ஐவரும் தொண்டாற்றி வருகிறார்கள். இவர்கள் ஐவரும் 3-6-90 அன்று சென்ற ஆண்டின் அறங்காவலர்களிடமிருந்து பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர்.

அதிசயிக்க வைத்த தெய்வத் திருப்பணி!

20 ஆண்டுகளுக்கு முன்பு, ஆந்திர மாநிலம் பெஜவாடாவிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமத்திற்கு நானும் வாரியார் சுவாமிகளும் சென்றிருந்தோம். அங்கு உள்ள மங்கம்மன் கோயிலுக்குச் சென்று 'மெய்யப்பசெட்டியார்; அவிட்ட நட்சத்திரம்' என அர்ச்சகரிடம் கூறி, ''அர்ச்சனை செய்ய வேண்டும்'' என்றேன்.

அவர் ''நீங்கள் நகரத்தாரா?'' என்று கேட்டார். ''ஆமாம்'' என்றேன். ''என்ன கோயில்?'' என்று கேட்டார். ''மாத்தூர் - மண்ணூர்'' என்றேன். ''உங்களுக்கு அர்ச்சனை கிடையாது. உச்சிக் காலத்திற்கு வாருங்கள்; பார்க்கலாம்'' என்றார். நானும் வாரியார் சுவாமிகளும் ஒன்றும் புரியாது வெகு நேரம் காத்திருந்து உச்சிக் கால வேளையில் மீண்டும் சென்றோம்.

மேளதாளம் முழங்க, நாதசுரம் ஒலிக்க அறங்காவலர் உதவியுடன் என்னை அழைத்துச் சென்று பரிவட்டம் கட்டி அர்ச்சனை செய்து தந்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அறங்காவலரிடம் அது பற்றிக் கேட்டபோது அவர் எனக்கு விளக்கம் தந்தார்.

வெற்றியூரைச் சேர்ந்த நகரத்தார் ஒருவர் அந்தப் பகுதியில் வட்டிக் கடை வைத்திருந்தபோது அந்த அம்மனுக்கு வைரப் பதக்கம் செய்து கொடுத்து அறக் கட்டளை ஒன்றை நிறுவி அக்கோயிலுக்கு நகரத்தார் யார் வந்தாலும் அவர்களுக்குப் பரிவட்ட மரியாதை செய்து அர்ச்சனை, அபிஷேகம் செய்து நகை சாற்றிக் கௌரவிக்க வேண்டுமெனப் பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதாகவும் எனவே தான் என்னை உச்சிக் காலத்திற்கு வருமாறு அர்ச்சகர் கூறியதாகவும் தெரிவித்தார்

இதைக்கேட்ட வாரியார் சுவாமிகள் ''நான் நகரத்தாராகப் பிறக்கவில்லையே'' என்றார்கள். இது போல் நமக்குத் தெரியாமல் நம் முன்னோர்கள் எத்தனையோ தெய்வத் திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள்.

— முரு. பழ. இரத்தினம் செட்டியார்

(காவிரிப்பூம்பட்டினம் நகரவிடுதியில் 30-7-90 அன்று நடைபெற்ற சாப்பாட்டுக் கூடத் திறப்பு விழாவில் பேசியது.)

பட்டினத்தார் பாடல்கள்!

பட்டினத்தார் சமாதியான சென்னை திருவொற்றியூரிலும் மயிலாப்பூர் கிருஷ்ணாம்பேட்டை மைதானத்திலும் இன்றுவரை மற்ற இனத்தவர்கள் கட்டத்தளத்தில் எரியூட்டும்போது, பட்டினத்தார் தன் தாய்க்குப் பாடிய இரங்கற் பாடல்கள் பத்தையும் பாடுகிறார்கள். அவற்றைப் பாடுவதற்கென்றே சிலர் இருக்கின்றனர். அவர்களுக்குச் சன்மானம் கொடுத்துப் பாடச் செய்கின்றனர். அதுபோல் நகரத்தார்கள் கட்டத்தளத்தில் எரியூட்டும் போது பட்டினத்தாரின் அந்தப் பத்துப் பாடல்களைப் பாடும் வழக்கத்தைக் கொண்டு வரவேண்டும்.

— அரு. சோமசுந்தரன்

(பட்டினத்தடிகள் திருவிழா நிகழ்ச்சியில்)

'கட்டு' பற்றி பழ. கருப்பையா!

கோவிலூரில் 76 ஊர் நகரத்தார்கள் பங்கு பெறும் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அதில் 1. முறைச்சிட்டை எழுதக்கூடாது. 2. சாமான் பரப்புதல் கூடாது. 3. மாமியார் சாமான் கொடுக்கக் கூடாது என கட்டு ஏற்படுத்த வேண்டும்.

10 வரிகளில் உள்ள முறைச் சிட்டையை 40 பக்கங்களுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

பெண்ணுக்கு வைக்கும் தலையணையைப் பார்த்தால் நான்கு விலாசங்கள் இருக்கின்றன. தெரியாத்தனமாக அதில் கையை வைத்து விட்டால் அது 'பிருபிரு' என்று போய் விடும்.

- பழ. கருப்பையா

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில்)

திருமணம்

நெற்குப்பை திரு. ந. பழ. மு. ராம. சொ. இராமசாமிச் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் B. Com, M. B A., A C A (London) க்கும் வி. லெட்சுமிபுரம் திரு. ப. ச. ராம. முத்தையாச் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி உமையாள் (B. A.)க்கும் 2-9-90 அன்று வி. லெட்சுமிபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

கடியாபட்டி நா. லெ. இராமநாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி உண்ணாமலைக்கும் ஆத்தங்குடி சித. மு. நா. நா. நாராயணன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் நாச்சியப்பனுக்கும் 26-8-90 அன்று கடியாபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

10. தேவை, தேவை - சமுகச் சிந்தனையுடைய சான்றோர்கள் - என்றும் பணிசெய்யும் மனங்கொண்ட இளைஞர்கள் தேவை.

என்ன, விளம்பரம்போல் இருக்கிறதே என்று சிந்திக்கிறீர்களா? இந்தத் தொடரில் நம் முன்னேற்றம் பற்றிப் பலவாறு சிந்தனைகளைக் கிளறிவிடுகிறோம். முன்பு யான் மூன்று மணியான யோசனைகள் தெரிவித்திருந்தேன். சென்ற இதழில்கூட, நம் நகரக் கோயில்களை - நம் முன்னேற்றத்திற்கு உதவும் சமுக மையங்களாகவும் கல்வி மையங்களாகவும் ஆக்க வேண்டும் என்று விரிவாக எழுதியிருந்தேன். இவையெல்லாம் ஆக்க வழிகாட்டும் ஆலோசனைகள். சிந்திக்க வைக்கும் கருத்துச் சிதறல்கள். இவை வழியாக ஒருவித மனப் பழக்கம ஏற்பட்டு, யாரேனும் அங்கங்கே இவற்றைச் செயற்படுத்த வருவார்கள், செயற்படுத்துவார்கள் என்று யான் திண்ணமுற எண்ணுகிறேன். நாங்கள் இவ்வளவுதான் செய்ய இயலும். யாரும் முழுமூச்சாக ஈடுபட வரும்போது, கூட இருந்து வழிகாட்ட, உதவ, ஒத்துழைக்க முடியும்.

எடுத்துக் காட்டாக அண்மையில் மறைந்த அமரர் - **நாகப்பா தொழிற்குழுத்** தலைவர் **மூத்தழகப்பரைக்** குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் சமுகத்திற்காக, முன்னின்று பாடுபட எண்ணி முனைந்த நேரத்தில் மறைந்துவிட்டார்கள்.

கிருஷ்ணகிரி **என். நாராயணன்** ''தமிழண்ணல் தெரிவித்துள்ள மூன்று யோசனைகளும் மிக அருமை. திரு. வி.என்.சிடி. தலைமையில் மதுரையிலேயே 1990க்குள் கூடி முடிவெடுக்க வேண்டுகிறேன்.'' என்று எழுதியிருப்பதுடன் ''தமிழண்ணல் முக்கிய பொறுப்பு வகித்து 'நகரத்தார் மாநாட்டுக் கருத்தாங்கு நடத்த வேண்டும்'' எனவும் சுட்டியுள்ளார்.

நகரத்தார்களுக்காகப் பொறுப்பேற்றுப் பணிசெய்யக் கூடிய, அறுபது அகவையைத் தாண்டிய தொழிலதிபர்கள் - சான்றோர்கள் - செயலாண்மை மிக்கவர்கள் தேவை. இதனால் ஓரளவு குடும்பப் பொறுப்புகளை முடித்துவிட்டவர்கள் தியாக மனத்துடன் முன்வரவேண்டும். முன்வருவதன்று பெரிது. இந்தத் துறையில், செயலாண்மைமிக்க அனுபவம்மிக்க, பொறுப்பான பெரியவர்கள் தான் முன்வரவேண்டும் - அதுதான் சிறப்பு. எங்களைப் போல் எழுதிப் படித்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள், இதில் ஓரளவே பயன்பட

முடியும். யான் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக இதை எழுதவில்லை. ஒத்துழைப்பது வேறு; முன்னின்று நடத்துவது. வேறு. நடத்தக்கூடிய பெரியவர்கள்தான் தேவை, தேவை என்று விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் பலர் வேண்டும் இப்பணியை முடிப்பதற்கு !

இளைஞர்களிலே சிலர் இதற்கென உருவாகும் அறிகுறிகள் தென்படுகின்றன. அவர்கள் வளர வளரச் சமூகமும் வளரும் என நம்புகிறேன். ''சான்றோர் சிலர் யான் வாழும் ஊரே'' என்றார், நரை அறியாத பிசிராந்தையார். ஏன்? ஓர் ஊர் வாழச் சிலர் நல்லவர்களாக இருந்தால்கூட, அதுவே பெருந்துணையாகும். இன்றும் நம் சமுகத்திற்கு அவ்வாறு பாடுபடும் ''தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான'' ஒருசிலர் தேவைப்படுகின்றனர். காரைக்குடி **சிவ. நாராயணன்** ''ஏன் நீங்களே பொறுப்பேற்கக் கூடாது'' என்று என்னையே கேட்கிறார். எவ்விதத்திலும் ஒத்துழைக்க இயலுமே தவிர, இதில் முழுமூச்சாக இறங்கப் பெரும் பணக்காரர்களான தொழிலதிபர்கள் தான் முன்வர வேண்டும். அல்லது நடுத்தர வகுப்பில் **செயலாண்மை மிக்கவர்கள்** முன்வர வேண்டும். மாநாட்டுக் கருத்தரங்கு தேவை என வற்புறுத்துமிவர் 'சிறப்பு மலர்' ஒன்றும் - நகரத்தார் பற்றிய அனைத்துப் புள்ளிவிவரங்களுடனும் வெளியிடப்பட வேண்டும் எனக் கூறுகிறார். யான் வலியுறுத்தியதற்கு ஏற்ப ''அனைத்**துலக நகரத்தார் சங்கங்களின்**'' பங்கேற்போடு, இம்மாநாடு நடத்தப்படல் நன்றென விளக்கியுள்ளார். வழக்காடு மன்றங்களும் கைதட்டல்களும் வேண்டாம் - செயலுக்கு வருவோம் - மதுரையில் மாநாடு கூட்டுவோம்

என ஆர்வத்துடன் எழுதியுள்ளார். **மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம்** இதுபற்றிச் சிந்திக்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த மாதம் 21ல வெளிவந்த **'இந்தியா டுடே'** தமிழ் இதழ் படித்தீர்களா? அதன் 42 ஆம் பக்கத்தில் **''கலையெல்லாம் விலையாகும் செட்டிநாடு''** பற்றிய, **'கண்ணீர்க் கட்டுரை'** ஒன்றை நம்மவரல்லாத ஒருவர் எழுதியுள்ளார். அதனைப் படித்துப் பாருங்கள். இதுபோல் நம் இனக் குறைகளை - வீடு குட்டிச்சுவராதல், மணமாகாது வயதாகிவரும் மகளிர், வறுமைக் கோட்டுக்கும் கீழே அல்லற்படுவோர் பற்றி உங்களூருக்குப் பக்கத்தில், உங்களுக்குப் பக்கத்தில், நீங்களறியும் விதத்தில் இருப்பனவற்றை எனக்கு - **நகரத்தார் குரல்** முகவரிக்கோ - அல்லது **தமிழண்ணல், 384 சதாசிவநகர், மதுரை-625020** என்ற முகவரிக்கோ எழுதுங்கள். பெயர், முகவரி தராமல் நம் குறைகளை குரலில் ஒலிக்கவும் நம் இனத்தவருக்கு உணர்த்தவும் அது பயன்படும். பெயர் விவரம் இரகசியமாக வைக்கப்படும்.

வேந்தன்பட்டி மெ. மு. ரயில் பழநியப்பன் தம் ஊரில் நகரத்தார்க்குப் பொதுவான கலியாண மண்டபமும், கலியாணத்திற்கு வாடகைக்கு விடதளவாடச் சாமான்களும் தேவை என ஓர் அருமையான அறிக்கை விடுத்துள்ளார்.

மேலைச்சிவபுரி **சுப. சிதம்பரம்** ''வரதட்சணைவாங்குவது தவறு. தீபாவளி, பொங்கல், மருந்து குடித்தல் எனப்பல வரிகள் வாங்குவது எப்போது நிற்கும்?'' எனக் காரசாரமாக எழுதியிருப்பதுடன் ''தமிழண்ணல் இல்லத் திருமணத்திலே வரதட்சணை வாங்கியுள்ளார். யார்மீது தவறு இருப்பினும் எடுத்துரைக்கத் தயங்கக் கூடாது'' என எழுதியுள்ளார். இதுபற்றி

யான் இத்தொடரில் எழுதிவருவன வற்றை அவர் தொடர்ந்து படித்து வருவதாகத் தெரியவில்லை. இது பற்றி வரும் இதழ்களில் மனந் திறந்து விவாதிப்போம். யான் எழுதியுள்ள ஆக்கபூர்வமான யோசனைகள் பற்றியும் ஊன்றிப் படித்துக் கடிதங்கள் எழுதினால் நல்லது. வாசகர்கள் பலரும் இக் 'கூட்டுச் சிந்தனை'யில் பங்கு கொள்ள முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(வளரும்)

பாராட்டுகிறோம்

சென்னை, கோடம்பாக்கம் பாத்திமா மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளியின் மாணவியான செல்வி எஸ். லதா மார்ச்' 90ல் நடைபெற்ற பிளஸ் டூ பொதுத் தேர்வில் 1200க்கு 1120 மதிப் பெண்கள் பெற்று பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்ச்சியடைந்துள் ளார்.



உயிரியல் (Biology) பாடத் தில் 200 க்கு 199 மதிப்பெண்கள் பெற்று சென்னை நகரத்திலேயே முதலாவது மாணவியாக வந்து பாரத வங்கியின் சிறப்புப் பரிசைப் பெற்றுள்ளார்.

பத்தாம் வகுப்பில் அறிவியல் பாடத்தில் மாநிலத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றவர் இவர்.

கோயம்புத்தூரில் B E. படித்து வரும் செல்வி எஸ். லதா கீழச் சிவல்பட்டியைச் சேர்ந்த தொழில திபர் திரு. சுப. சிங்காரம்- திருமதி வாசுகி சிங்காரத்தின் புதல்வியா வார். செல்வி லதாவின் திறமை யைப் பாராட்டுகிறோம்.

காரைக்குடியில் புதிய நிறுவனத் திறப்பு விழா

காரைக்குடி செக்காலை ரோட் டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 'வி. ஐ. பி. ஃபோட்டோ கிரா பிக்ஸ்' என்ற நிறுவனத்தை கம் பன் அறநிலையின் பொருளாளர் திரு. அழ. திருநாவுக்கரசு செட்டி யாரின் தலைமையில் நகர் மன்றத் தலைவர் திரு. சித. சிதம்பரம் 14-9-90 அன்று திறந்து வைத்தார்.

கல்விக்கு உதவித் தொகை

மேனிலைப்பள்ளி (+ 2) இறு தித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று இளமறிவியல் வேளாண் துறையில் (B Sc. Agri) சேர்ந் துள்ள நகரத்தார் மாணவர் ஒரு வருக்கு T. சிதம்பரம் செட்டியார், சோம. அருணாசலம் செட்டியார் நினைவு நிதியிலிருந்து ஆண் டொன்றுக்கு ரூ. 2000/- வீதம் நான்காண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட இருப்பதாக வும் இவ்வுதவித் தொகையைப் பெற விரும்புவோர் தங்களின் தகுதிகள், மதிப்பெண் பட்டிய லின் நகல் ஆகிய விவரங்களுடன் 31-10-90 க்குள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதலாம் என்றும் தெரிவிக்கப் பெறுகிறது.

Dr. SM. Lakshmanan
164 Mariappa Nagar
Annamalai Nagar-608002

செல்வி மாலதி இராமநாதன்

படத்தில் காணும் செல்வி மாலதி இராமநாதன் ஒப்பற்ற கலையான பரதக் கலையைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பயின்று வருகிறார்.

சேலம் பாத்திமா கான்வெண்டில் 7ஆவது வகுப்பில் கல்வி கற்று வரும் செல்வி மாலதி இராமநாதன், அண்மையில் காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவிற்கு வந்திருந்தார். அப்போது அவரை நேர்முகம் கண்டேன். நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் தயக்கமில்லாமல் பதிலளித்தார். எனவே உதவிக்காகப் பக்கத்தில் இருந்த அவரது தந்தையார் திரு. வி. எல். இராமநாதனுக்கு வாய் திறந்து பேச வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

சேலம் வித்தியா மந்திரில் 10ஆம் வகுப்புப் படித்து வரும் தன் ஆச்சி ஆர்எம். சீதாலெட்சுமியின் தூண்டுதலே, தான் பரதம் கற்றுவருவதற்குக் காரணம் என்றும் தன்னுடைய நடனக் கலைக்குத் தாயும் தந்தையும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வேண்டிய ஒத்துழைப்பை நல்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

சேலம் அபிநயா நாட்டியக் குழு கலாலயத்தைச் சேர்ந்த குமாரி லதா மாணிக்கம் தனது ஆசிரியை என்றும் தனக்கு புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், சிவதாண்டவம், தசாவதாரம், தில்லானா, ஓம் நமச்சிவாயா போன்ற நடனங்கள் தெரியுமென்றும் அவர் கூறினார்.



செல்வி மாலதி இராமநாதனின் நடன அரங்கேற்றம் தேவகோட்டையில் 1989 மார்ச்சில் - அவரது தாய் மாமன் திருமணத்தில் 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. தலைமையில் பழநி அருளாடியார் முன்னிலையில் நிகழ்ந்தது. அதன்பின் 4, 5 திருமணங்களில் நடனமாடினார். அடுத்து சேலம் கந்தகிரியில் கந்தாஸ்ரமம் தவத்திரு சாந்தானந்த சுவாமிகள் முன்னிலையில் 1989 சிவன்ராத்திரி நிகழ்ச்சியில் நடந்தது. பின்பு சில கோவில் திருவிழா நிகழ்ச்சிகள். அடுத்து சேலம் அரசு பொருட்காட்சியில். இப்படியாக வளர்ந்து வரும் அவர் 1-8-90 அன்று காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவில் நடனமாடி அனைவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்டார். பானையின் மீது அவர் வில்லாக வளைந்து நடனமாடிய காட்சி இன்னும் மனதில் பசுமையாக இருக்கிறது.

11 வயதுடைய செல்வி மாலதி இராமநாதன், தேவகோட்டை அப்பு லெ. பெரி. வெ. குடும்பத்தைச் சேர்ந்த திரு. வி. எல். இராமநாதன் - திருமதி ஆர்எம். லலிதா ஆச்சியின் புதல்வியாவார். (திரு. இராமநாதன் சேலம், கோவை, திருச்சி, சென்னை ஆகிய நகரங்களில் ஐஸ் தயாரிக்கும் நிறுவனங்களை நடத்தி வருகிறார்)

பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்த செல்வி மாலதிக்கு கற்பக விநாயகரின் அருள்மட்டுமல்ல; பெரியவர்களின் ஆசியும் ஆச்சிமார்களின் பாராட்டும் என்றும் உண்டு.

நேர்முகம் : எல். சுந்தரம்

கலைஞர் ஆட்சியிலே கிடைத்த சிறப்பு!

மேன்மைமிகு நீதிபதி அவர்கள் அங்கம் வகிக்காத சங்கமே கிடையாது. இவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். திறமையால் முன்னுக்கு வந்தவர்கள். முன்னேற்றக் கருத்துடையவர்கள். இவர்களை நம் இளைஞர்கள் அனைவரும் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்.

இவர்கள் நீதிபதியாகப் பதவி பெற்றது நாட்டுக்குச் சிறப்பு; நகரத்தார்களுக்குச் சிறப்பு. நம் சமூகத்தில் அறிஞர்கள், கெட்டிக்காரர்கள், வணிகப் பெருமக்கள், மேதைகள் பலர் இருக்கிறார்கள். ஆனால் இதுவரை யாரும் உயர்நீதிமன்ற நீதிபதியாக வந்தது கிடையாது. இப்பொழுது அந்தக் குறையும் நீங்கிவிட்டது. இது நம் நகரத்தார்கள் இலட்சம் பேருக்கும் கிடைத்த சிறப்பு. கலைஞர் ஆட்சியிலே தான் இப்பெரும் சிறப்புக் கிடைத்திருக்கிறது. அதற்காக நாம் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(சென்னை, வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 5-8-90 அன்று நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்)



சென்னை வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக சென்னையில் 5-8-90 அன்று நீதிபதி திரு. அரு. லெட்சுமணனுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் அம்மன்றத்தின் கௌரவத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் நீதிபதிக்குப் பொன்னுடை அணிவித்து மகிழும் காட்சி.

சென்னையில் நீதிபதிக்குப் பாராட்டு விழா

சென்னை வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 5-8-90 அன்று சென்னை சி. எம். யு. ஆடிட்டோரியத்தில் மன்றத்தின் கௌரவத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் மற்றொரு கௌரவத் தலைவர் திரு. எஸ்பி. பழநியப்ப செட்டியார் அவர்கள் முன்னிலையில் நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்களுக்குப் பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

மன்றத்தின் தலைவர் திரு. எம் ஆர். சுப்பையா வரவேற்றுப் பேச, செயலாளர் திரு. எஸ். முத்து அறிக்கை வாசித்தார். விழா நிகழ்ச்சிகளை பொருளாளர் திரு. ஏ. கே. கிருஷ்ணன் தொகுத்து வழங்கினர்.

நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்களைப் பாராட்டி திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், தமிழ்மாமணி முனைவர் திரு. மெ. சுந்தரம், முனைவர் திரு. ச. மெய்யப்பன், திரு. பழ. கருப்பையா வானதி திரு. ஏ. திருநாவுக்கரசு, திரு. ஏஎல். எஸ். கண்ணப்பன், திரு. எஸ். எஸ். பழநியப்பன், திரு. ரவீந்திரன் ஆகியோர் பேசினர்கள்.

நீதிபதி ஏஆர். லெட்சுமணன் அவர்கள் ஏற்புரை வழங்கிட துணைச் செயலாளர் திரு. ஆர்எம். சொக்கலிங்கம் நன்றி நவில விழா இனிதே நிறைவேறியது.

பரிசுகளைக் குவித்து வரும் கும. தமிழரசன்

14ஆவது வயதில் - பள்ளியில் கல்வி கற்றபோது 24 பேர் கலந்து கொண்ட பேச்சுப் போட்டியில் முதன் முதலாகப் பரிசு பெற்ற திரு. கும. தமிழரசன் இன்னும் தொடர்ந்து பரிசுகளையும் பாராட்டுக்களையும் குவித்து வருகிறார்.

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் 28-1-88 அன்று நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு; மதுரை லேடி டோக் கல்லூரியில் 20-9-88 அன்று நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் பரிசு; 26-9-88 அன்று மதுரை வணிகர் சங்கப் பேரவை நடத்திய பேச்சுப் போட்டியில் மூன்றாம் பரிசு; 31-10-88



அன்று மதுரை குஜராத் சமாஜத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு; மதுரைக் காமராசர் பல்கலைக் கழக இளைஞர்களின் விழாவில் 12-2-89 அன்று நடைபெற்ற பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு; தியாகராசர் கல்லூரி பொருளியல் துறை மார்ச்'89ல் நடத்திய பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு; 21-3-89ல் தியாகராசர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு - இப்படியாகப் பரிசுகளையும் பாராட்டுக்களையும் குவித்து வருகிறார் இந்த 23வயது இளைஞர்,

1987-88 ஆம் ஆண்டு நடைபெற்ற தியாகராசர் கல்லூரியின் ஆண்டு விழாவில் குன்றக்குடி அடிகளார் நினைவுச் சுழற்கேடயத்திற்கான முதல் பரிசை இவரது தலைமையிலான அணி வென்றது. அதே ஆண்டு விழாவில் இவர் வணிகவியல் துறையின் **out standing student** ஆகத் தேர்வு செய்யப்பெற்றுச் சிறப்புப் பரிசு பெற்றார்.

1988-89 ஆம் ஆண்டில் அதே கல்லூரி ஆண்டு விழாவில் வணிகவியல் துறையின் சிறந்த **out going student** ஆகத் தேர்வு செய்யப் பெற்றுச் சிறப்புப் பரிசு பெற்றார். இவ்வாறு பேசியே பரிசுகளைக் குவித்த திரு. கும. தமிழரசனுக்கு தியாகராசர் செய்தி மடல் 'சொல்வீரர்' என்ற பட்டத்தினை வழங்கியுள்ளது.

மதுரை நகரத்தார் புத்தக வங்கி 15-10-89ல் நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினாப் போட்டி ஆகிய மூன்றிலும் முதல் பரிசு பெற்றவர் இவர்.

B.Com. பட்டதாரியான திரு. தமிழரசன் இப்போது திருச்சி விகேயென் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இடையிடையே 'மக்கள் கவிஞர்' திரு.அரு. நாகப்பன் தலைமையிலான அணியில் நீதிமன்றம், பட்டி மன்றங்களில் பங்கு கொண்டு பேசி வருகிறார்.

இவர் கல்லூரியில் பயிலும் காலத்தில் கதை, வசனம், பாடல் எழுதி நடித்த நாடகங்கள் பல்வேறு தரப்பினரின் பாராட்டையும் பெற்றது.

வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு. கும. தமிழரசன் தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் - திருமதி மீனாட்சி ஆச்சியின் மூத்த புதல்வராவார்.

— எல். சுந்தரம்



அலவாக்கோட்டை சி, அரு, சின. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சீனிவாசன் B A , D Pharm க்கும் மதகுபட்டி சொக்கலிங்கபுரம் கரு. சுப. சொ. ரெங்கநாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி விஜயலெட்சுமிக்கும் 26-8-90 அன்று மதகுபட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. 13-9-90 அன்று சென்னை நியூ உட்லண்ட்ஸில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நம்மவர்களுக்கு நல்லாசிரியர் விருது!

புதுக்கோட்டை மாவட்டம் இராயவரம், சு. கதி. காந்தி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அண. பெரிச்சியப்பன் அவர்கட்கு இவ்வாண்டு தமிழக அரசு நல்லாசிரியர் விருது வழங்கியுள்ளது.

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 5-9-90 அன்று தமிழக அரசு நடத்திய ஆசிரியர்தின விழாவில் கல்வி அமைச்சர் பேராசிரியர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள் நல்லாசிரியர் விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

திரு. பெரிச்சியப்பன் 1979 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறந்த ஆசிரியர் என்ற சுழற் குழுவின் விருதும் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாண்டு தமிழக நல்லாசிரியர் விருதுபெற்ற 228 பேரில் கோட்டையூர், சிதம்பரம் செட்டியார் மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. மு. வள்ளியம்மை, இராங்கியம் சிவகாமி அம்பாள் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. வீர. வீரப்பன், இராயவரம், சு. கதி. காந்தி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. அண. பெரிச்சியப்பன், ஆவணிப்பட்டி வி. க. க. நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. எஸ். பழனியப்பன் ஆகிய நால்வரும் நமது நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். வளர்க அவர் தம் பணிச் சிறப்பு.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகளின் நான்காவது ஆண்டு பீட ஆரோஹண விழா 28-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ துலாவூரில் 5-10-90 அன்று நடைபெற்ற மகா குருபூஜையில் அலவாக்கோட்டை பழ. நாக. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு 'அறமனச்செம்மல்' என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

ஃ டாக்டர் ராஜாசர் அண்ணமலைச் செட்டியார் அவர்களின் 110 ஆவது பிறந்த தின விழா 30-9-90 அன்று சென்னை ராணி சீதை மன்றத்தில் நடைபெற்றது.

ஃ நாட்டரசன்கோட்டை நகரச் சிவன் கோயிலில் 5 ஆவது ஆண்டு விழா அபிஷேக விழா 7-9-90 அன்று நடைபெற்றது.

ஃ மதுரை குட்டைய சுவாமி மடத்தின் குரு முதல்வர் தவத்திரு குட்டைய சுவாமிகள் அவர்களின் குருபூஜை 4-9-90 சதய நட்சத்திரத்தன்று நடைபெற்றது.

ஃ குமாரராஜா மு. அ. மு. முத்தையாச் செட்டியார் அவர்களின் 62 ஆவது பிறந்த நாள் விழா 6-9-90 அன்று சென்னை ராணி சீதை மன்றத்தில் நடைபெற்றது.

ஃ அமராவதி புதூர் ஸ்ரீ சாரதா சேவாச்ரமத்தின் எல்லைக்குள் சாரதா மந்திர் நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டு விழா 7-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ கவிஞர் திரு. முடியரசனரால் தொகுக்கப் பெற்றுள்ள, சீர்திருத்தச் செம்மல் கானாடுகாத்தான் வை. சு. சண்முகம் செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலின் வெளியீட்டு விழா 2-10-90 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பில் நீதிபதி திரு. அரு. லெட்சுமணனுக்கு 6-10-90 அன்று திருச்சி தமிழ்ச் சங்க மன்றத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

மணிவண்ணன் மடல்

சில தவிர்க்க முடியாத காரணங்களால் ''மணிவண்ணன் மடல்'' தொடர் கட்டுரை, இந்த இதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் (நவம்'90) இடம் பெறும்.

— ஆசிரியர்

வலையபட்டி திருமண வாழ்த்தரங்கத்தில்..

தி. கனகசபை செட்டியாரின் மாப்பிள்ளை கொடுத்து வைத்தவர். அதிர்ஷ்டக்காரர். இந்த மாதிரி மாமனுர் எல்லோருக்கும் கிடைப்பது அரிது. இது வலையபட்டியா அல்லது நெற்குப்பையா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

உலக மக்கள் தொகை 540 கோடி. இந்தியாவின் மக்கள் தொகை 90 கோடி. எனவே இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் போதும். மற்றபடி அவர்கள் விருப்பம்.

திருமணத்தை ஆண்டவன் மட்டும்தான் நிச்சயம் செய்ய முடியும். ஆண்டவனுக்குத் தெரியவே திருப்பூட்டும்போது கெட்டி மேளம் கொட்டுகிரேம்.

— மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார்

தி. கனகசபை செட்டியார் அவர்கள் தமிழகமெங்கும் சுற்றி வருவார்கள். ஒரு இடத்தில் 5 நிமிடங்கள் இருந்தால் 3 நிமிடங்கள் சிரிப்பார்கள்; 2 நிமிடங்கள் பேசுவார்கள். அவர்களுடைய பேச்சு இனிப்பாக இருக்கும். அவர்களுடைய பேச்சை அவர்களது மாப்பிள்ளை மூத்துராமன் மறுத்துப் பேசமாட்டார்கள். சிரித்தே காரியத்தைச் சாதிப்பதில் கனகசபை அண்ணன் கெட்டிக்காரர். கனகசபை அண்ணன் வீட்டில் 22 வருஷம் வளர்ந்த இந்தப் பேத்தி அதிர்ஷ்டக்காரப் பெண்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

கனகசபை செட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாக எனது நண்பர். அவர் மிகப்பெரிய சேல்ஸ்மேன் அன்பை விற்கிறவர். வரமுடியாது என்று சொல்லக் கூடியவர்கள் கூட அவரது அன்புக்குக் கட்டுப்பட்டு

தனிச் சிறப்பு

நம் சமூகம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை நம் மினத்தவர் யாரும் கிரிமினல் குற்றங்கள் செய்ததும் இல்லை; மதம் மாறியதும் இல்லை. இது நமது சமூகத்தவருக்கு உள்ள தனிச் சிறப்பு.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

(சென்னை, வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 5-8-90 அன்று நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்)

வர ஒப்புக்கொண்டுவிடுவார்கள்.

— இலக்கியச் சிந்தனை ப. லெட்சுமணன்

கனகச்பை செட்டியார் அவர்கள் 40 ஆண்டுகளாக எங்கள் வங்கியின் வாடிக்கையாளர். அவர்கள் வேறு வங்கிக்குச் செல்வதில்லை. நாங்கள் செல்ல விடுவதுமில்லை. 10 நிமிடங்கள் நம்முடன் அவர்கள் பேசினால் அவர்களை நாம் ஆயுள் முழுவதும் மறக்க முடியாது.

— சுப. சபாபதி (தலைவர், மதுரை வங்கி)

பேத்தியைப் பெற்றது கனகசபை செட்டியாரின் அதிர்ஷ்டம். கனகசபை செட்டியாரை அய்யாவாகப் பெற்றது பேத்தியின் அதிர்ஷ்டம். உயர்ந்த மனம் பெற்றவர் இவர். ''சிரித்து வாழ வேண்டும்; பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே'' என்றார் கண்ணதாசன். அதைக் கடைப் பிடிப்பவர் கனகசபை செட்டியார்.

இது நெற்குப்பையுமல்ல; வலையபட்டியுமல்ல. சி த ம் ப ர ம். மாப்பிள்ளையின் பெயர் சிதம்பரம். அடுத்து வி. என். சிதம்பரம். ஆலயத்திலே கனகசபை. இங்கு அய்யா கனகசபை. அங்கு நடராஜர். இங்கும் நடராஜர். ஆக இது சிதம்பரம் போலத் தோன்றுகிறது.

— சொ. சொ. மீ. சுந்தரம்

(நெற்குப்பை தி. கனகசபை செட்டியார் அவர்கள் பேத்தியும் வலையபட்டி அரு. முத்துராமன் செட்டியார் அவர்கள் புதல்வியுமான செல்வி வள்ளிக்கண்ணுவுக்கும் குருவிக்கொண்டான்பட்டி எஸ். வி. எஸ். எம். சிவராமன் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் M Sc.க்கும் வலையபட்டியில் 3-9-90 அன்று நடைபெற்ற திருமணத்தையொட்டி நடைபெற்ற வாழ்த்தரங்கில் பேசியவை இவை.)

நினைத்தே பார்க்க முடியாத வாய்ப்பு!

சிறுபான்மை சமூகத்திற்குக் கிடைக்க இயலாத, நினைத்தே பார்க்க முடியாத ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. நமது ஆச்சிமார்கள் தாலாட்டுப் பாடலில் ''கோர்ட்டைத் திறந்து குறிச்சியிலே அமர்ந்து ஜட்ஜோடு பேசுகிற தர்மவான் பேரனே'' எனப் பாடுவார்கள். ஜட்ஜோடு பேசுவதைப் பெருமையாகக் கருதும் இந்நாளில் ஜட்ஜ் ஆவது என்றால் எவ்வளவு பெருமை! நகரத்தார், நீதிபதியாக இருந்தால் நீதி எவ்வளவு நேர்மையாக, செம்மையாக இருக்கும் என்பதை நீதிபதி லெட்சுமணன் அவர்கள் நாடறியச் செய்ய வேண்டும்.

— பழ. கருப்பையா

(சென்னை, வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 5-8-90 அன்று நீதிபதி மாண்புமிகு ஏஆர். லெட்சுமணன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில்)

கண்ணதாசன் பற்றி சுப. கதிரேசன்

20ஆம் நூற்ருண்டில் 'அரசு' என்ருல் அது கவியரசர் கண்ண தாசனைக் குறிக்கும். கண்ணதாசன் தானுகத் தலை தூக்கிக் கொண்டு மற்றவர்களைத் தூக்கி விட்டார்.

அவர் 140 புத்தகங்கள் எழுதி யுள்ளார். 27 ஆயிரம் பாடல்களைப் புனைந்துள்ளார்.

அவர் ஒரு திறந்த புத்தகம். திருமணத்திற்குப் பெண்களைப் பார்த்துவந்த அவரிடம் ''உனக்கு எந்தப் பெண்ணைப் பிடித்திருக் கிறது'' என அவரது தாயார் கேட்க, ''எனக்கு நான்கு பெண் களையுமே பிடித்திருக்கிறது'' என் ருர்.

''நான் கெட்டதனுல்தான் உங்களுக்குப் பாடம் சொல்ல முடிகிறது'' என்பார்.

''வலக் காது இடக் காது இரண்டும் கேட்காது'' எனத் தன் மனைவியைப் பற்றிக் குறிப் பிடுவார்.

மதுவுக்குப் பேசும் ஆற்றல் இருக்குமாஞல் ''என்னை அருந் தியவர்கள் எல்லாம் ஆடினுர்கள். கண்ணதாசன்தான் பாடினுர்'' எனக் கூறும்.

- பேராசிரியர் சுப. கதிரேசன்

(பட்டினத்தடிகன் திருவிழா பேரவை நிகழ்ச்சியில் (2-8-90)

கப்பல் பயணம்

பட்டினத்தடிகளின் 5 ஆம் திருநாளன்று (31-7-90) மருத வாணர் கப்பல் பயணமாகக் கடற் கரை செல்லும் நிகழ்ச்சியில் திரு வாளர்கள் கண்டனூர் கா. அரு. கா. அருணுசலம் செட்டியார், ஓ. சிறுவயல் கு. வெ. கு. வெங் கடாசலம் செட்டியார், நாட்ட ரசன்கோட்டை குப. சொக்கலிங் கம், நடராஜபுரம் சுப. சுப. நாரா யணன், காரைக்குடி க. அ. ப. அ. பழநியப்பன் தாணிச்சாவூரணி முத்தையா, பொன். புதுப்பட்டி சகுந்தலா சொக்கலிங்கம், பள்ளத் தூர் விசாலாட்சி சோலையப்பன் மேலைச்சிவபுரி எம். பூங்கோதை ஆகியோர் கப்பலுக்குப் பின்னல் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு கடற்கரை சென்று திரும்பினர்.

ஒப்பாரி

பட்டினத்தடிகளின் 7 ஆம் திருநாளன்று (2-8-90) பட்டினத் தடிகளின் தாயார் ஞானகலாம் பிகை பரிபூரணமடைந்து கேதம் கேட்கும் நிகழ்ச்சியில் அரண்மனை சிறுவயல் மீனுட்சி ஆச்சி, கீழப் பூங்குடி மீனுட்சி ஆச்சி, பள்ளத் தூர் ஜானகி ஆச்சி, வேந்தன் பட்டிக் கவிஞர் T. குமரப்பன் ஆகி யோர் ஒப்பு வைத்துப் பாடினர்.

பட்டினத்தடிகளின் திருவிழாவில் ஏலம்

காவிரிப்பூம்பட்டினம் பட்டி னத்தடிகளின் அற்புதத் திருவிழா வில் 2-8-90 அன்று மாலை நகர விடுதியில் மஞ்சள், தேங்காய், கற் கண்டு, வாழைப்பழம், பேரீச்சம் பழம், எலுமிச்சம்பழம், சர்க்கரை, வெற்றிலை பாக்கு, உப்பு, மருத வாணர்பட்டு போன்ற 16 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப்பெற்றன. காரைக்குடி திரு. பழ. தெ. லெ. அருணுசலம் செட்டியார் ஏலம் கூவ பொன். புதுப்பட்டி நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் ஏலம் எடுத்தவர்களுக்குப் பொருட்களை வழங்கினுர்கள். பெண்களும் ஆர்வமாக ஏலத்தில் பங்கு கொண்டனர்.

பண்பாளர் முத்தழகப்பர்



நகரத்தார் மரபுக்குத் திலகம் ஆனய் !
நாகப்பா சைக்கிள்மார்ட் வளர வாழ்ந்தாய் !
அகமுயர்ந்த சான்ருேரால் மதிக்கப் பெற்ருய் !
அறப்பணியும் திருப்பணியும் அமையச் செய்தாய் !
சிகரமெனும் புகழ்க்குன்றில் ஏறும் போது
சிறப்புடைமுத் தழகப்ப ! தெய்வ மானய் !
தகவுடைய மணியோடும் ஒலியாய்ச் சேர்ந்தாய் !
தமிழன்ப ! உன்னினைவு தழைத்து வாழ்க !

— சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.

முத்தழகப்பருக்கு அஞ்சலி

எழுத்துளது இங்கே! ;
எழுதச் சொன்னவர் எங்கே?

டாக்டர் தமிழண்ணல்

பொன்னிறம் துலங்கும் மேனி — மென்மைப்
பூவிலும் சிறந்த உள்ளம்
மன்னிடும் மழலை பேசும் — இன்பக்
குழந்தைபோல் சிரிப்புப் பேச்சு!

அருந்துணை மீனாட்சி யாச்சிபால் — என்றும்
அகலாத அன்பு பூண்டு
திருமண மக்கள் போலக் — கண்முன்னர்
திகழ்ந்தென்றும் தோன்றும் காட்சி!

அன்பொன்றே அறியும் நெஞ்சம் — யாரையும்
அணைத்து உறவாடும் பண்பு!
மன்னும்எம் முத்தழகப்பர் — உலகில்
மாற்றுக் குறையாத தங்கம்!

முயற்சியில் இளைத்த தில்லை — ஒருநாளும்
முன்னேற்றம் தவிர்ந்த தில்லை!
அயற்சியை அறிந்த தில்லை — உழைப்பால்
அரசென உயர்ந்த மேதை!

நாளுமே வளர்ச்சி கண்டு — சொந்த
நாகப்பர் பெயரை உச்சிக்
கோளுக்கே கொண்டு சென்ற — எங்கள்
குறைவிலாச் செல்வர் எங்கே?

ஒருநொடிப் பொழுதில் எம்மை — அந்தோ
உலுப்பிடும் கண்ணீர் சிந்தி
வருந்திட விட்டுச் சென்றார்! — என்றும்
அவர்புகழ் வழுத்தி வாழ்வாம்!

எழுதுங்கள் 'குரலு'க் கென்றார்! — எங்கள்
எழுத்திலே பெருமை கண்டார்!
எழுத்துளது இங்கே, அந்தோ — எம்மை
எழுதச் சொன்னவர் எங்கே? எங்கே?

கறுப்பு: ஓர் விளக்கம்

“‘சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் என் பக்கத்தில் இல்லாவிட்டால் நான்கூட நிறமாக இருப்பேன்’’ என வி. என். சிடி. அவர்கள் சொன்னார்கள். சிவப்பு என்பது ஒரு பிரேமை. மன்மதன் - கறுப்பு; மீனாட்சி - கறுப்பு; மீனாட்சி திருமைந்தன் வி.என்.சிடி. யும் கறுப்பு. ‘கறுப்பு என்றால் ‘அழகு’ என தமிழ் இலக்கியம் கூறுகிறது.

- முரு. பழ. இரத்தினம் செட்டியார்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில்)

திருமணம்

நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலின் கௌரவக் கண்காணிப்பாளர் பெரி. அரு. கண. இராமசாமிச் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி சித்திராதேவி B.A., Dip Co. Op க்கும் கானையார் மங்கலம் குப. சித கண்ணப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் திருப்பதி M A க்கும் 2-9-90 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்கு தொழிலதிபர்கள், வணிகர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.



நடராஜபுரம் திரு. உ. ராம. உடையப்ப செட்டியார் புதல்வி செல்வி விஜயாவுக்கும் கண்டவராயன்பட்டி திரு. பெரி. சுப. நா. சுப்பையா செட்டியார் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் B.E.(Mech) க்கும் 2-9-90 அன்று நடராஜபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

படத்தில் (இடமிருந்து வலமாக) மணமக்களுடன் திருவாளர்கள் கி. பாரதீயன், உ. ராம. உடையப்ப செட்டியார், வி. என். சிதம்பரம் செட்டியார், கலைமகள் இராம. நடராஜன் செட்டியார், முத்து உல. சுப. உலகப்ப செட்டியார், நா. சுப்பையா செட்டியார், எம். சிஎன். மாணிக்கம் உள்ளனர்.

நேமம் கோயிலின் புதிய நிர்வாகக் குழு

நகரக் கோயில்கள் ஒன்பதில் ஒன்றான நேமம் அருள்மிகு ஸ்ரீஜெயங்கொண்ட சோழீஸ்வரர் சௌந்தரநாயகி அம்பாள் கோவில் நகர விடுதியில் 21-5-89 அன்று மகாஜன சபைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது 5 ஆண்டுகளுக்கு நிர்வாகம் செய்ய 20 பேர் உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப் பெற்றனர். ஒவ்வொரு ஆண்டும் 4 பேர் வீதம் 5 ஆண்டுகளுக்கு (22-5-89 முதல்) நிர்வாகம் செய்து வருவது என முடிவு செய்யப் பெற்றது.

அதன்படி செம்பனூர் திரு. கும. நா. சுப. நா. நாகப்ப செட்டியார் தலைவராகவும் கீழச்சிவல்பட்டி திரு. மெ. மு. கரு. முத்தையாச் செட்டியார் துணைத் தலைவராகவும காரைக்குடி திரு மு. ராம. சொ. பெரி. சொக்கலிங்கம் செட்டியார் செயலாளராகவும் இராங்கியம் திரு. நா. அ. சுப்பிரமணியன் செட்டியார் பொருளாளராகவும் இருந்த குழு 22-5-89 முதல் 21-5-90 வரை நிர்வாகம் செய்துவந்தது.

இப்போது இராங்கியம் திரு. வ. நா. சிதம்பரம் செட்டியார் தலைவராகவும் வலையபட்டி திரு. கேஆர் ஆர்எம் அண்ணாமலை செட்டியார் துணைத் தலைவராகவும் நெற்குப்பை திரு. பழ. அ. அடைக்கப்ப செட்டியார் செயலாளராகவும் கோட்டையூர் திரு. லெ. பெ. வீரப்ப செட்டியார் பொருளாளராகவும் உள்ள குழு நிர்வாகம் செய்துவருகிறது. இவர்களுடைய நிர்வாக ஆட்சிக் காலம் 22-5-90 முதல் 21-5-91 வரை ஆகும்.

22-5-91 முதல் ஓராண்டுக்கு பள்ளத்தூர் திரு. அ. ராம. தே. அழ. தேனப்ப செட்டியாரைத் தலைவராகக் கொண்ட குழுவும் 22-5-92 முதல் ஓராண்டுக்கு தேவகோட்டை திரு. சேவு. அண. அண்ணாமலை செட்டியாரைத் தலைவராகக் கொண்ட குழுவும் 22-5-93 முதல் ஓராண்டுக்கு வேந்தன்பட்டி திரு. சோம. இயற்பகை செட்டியாரைத் தலைவராகக் கொண்ட குழுவும் நிர்வாகம் செய்யும் எனக் கூறப் பெறுகிறது.

வெற்றிச் சிந்தனை

செல்வம் பெருகப் பெருக அதில் ஆசை அதிகமாவது போல, அறிவு பெருகப் பெருக அதில் ஆர்வம் அதிகமாக வளரும்.



மதுரை வங்கி பண்பாட்டுப் பேரவை சார்பில் நீதிபதி திரு. அரு. லெட்சுமணன் அவர்களுக்குச் சென்னையில் 19-7-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் திரு. அரு. லெட்சுமணன், மதுரை வங்கியின தலைவர் திரு. சுப. சபாபதி, பொது மேலாளர் திரு. கே. இராமநாதன்.

ஆணவம் இல்லாதவர்கள்!

நகரத்தார்கள் தராசுக்குச் சமமானவர்கள். நகரத்தாருக்கு இணையாக எடை போடக்கூடியவர்கள் உலகத்திலேயே இல்லை. இக்கட்டிடத்தைக் கட்டிய பொறியாளரைப் பாராட்ட வேண்டும், பட்டம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது பெரிய உள்ளத்தைக் காட்டுகிறது. தன் மானத்தை விட இனமானம் தான் பெரியது. இனத்தை முன்னேற்றத் தவற விடுதல் கூடாது.

காசி முதல் கன்னியாகுமரி வரை நகரத்தார்கள் நன்கொடையில் உருவாகாத கோயில்களே இல்லை என ஆர்எம். வீ. சொன்னார். கருணையிலே, கல்விக்கு, திருமணத்திற்கு வழங்குவதிலே நகரத்தாரை மிஞ்ச ஆள் இல்லை. ஆணவம் சிறுது கூட இல்லாதவர்கள் நம்மவர்கள்.

- மக்கள் கவிஞர் அரு. நாகப்பன்

(காவிரிப்பூம்பட்டினத்தில் 30-7-90 அன்று நடைபெற்ற சாப்பாட்டுக்கூடத் திறப்பு விழாவில்)

திருமணம்

கொல்லங்குடி அழகாபுரி உ. அ. சா. உ. சண்முகநாதன் அவர்களின் புதல்வி செல்வி சிவகாமி என்கிற விஜயலெட்சுமிக்கும் வெற்றியூர் பழ. மு சா. காளையப்ப செட்டியார் அவர்களின் சுவீகாரப் புதல்வன் செல்வன் முத்துக்கருப்பன் என்கிற பழனியப்பன் B. Com.க்கும் 2-9-90 அன்று கொ. அழகாபுரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பண்பாளரை இழந்தோம்

சிவந்த மேனியும் சிரித்த முகமும் கனிவான பேச்சும் வெள்ளை உள்ளமும் எந்நேரமும் தொழில் பற்றிய சிந்தனையோடும் இருந்த கோனபட்டு திரு. இராம. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் (பங்குதாரர், நாகப்பா சைக்கிள்மார்ட் மற்றும் சகோதர நிறுவனங்கள்) 7-9-90 அன்று மாரடைப்பால் காலமானார்கள் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர்களது மறைவால் அவர்களது தொழில் நிறுவனங்கள் ஒரு சிறந்த உரிமையாளரையும் நாடு ஒரு சிறந்த தொழிலதிபரையும் இழந்து விட்டது. அவர்களது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

திரு. முத்தழகப்ப செட்டியார் அவர்கள் கண்டனூரில் பிறந்து கோனபட்டுக்கு 1949ல் சுவீகாரம் வந்தவர்கள். மலேஷியாவில், இரங்கூனில் தொழில் பயிற்சி பெற்றவர்கள். 1947ல் இவர்கள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் தலைமையிலான இந்தியத் தேசியப் படையில் (I.N.A) சேர்ந்து படைப் பயிற்சி முகாமிலும் 13 வீரர்கள் கொண்ட படைத் தலைவராகவும் இருந்து நாட்டுக்கு சேவை செய்தவர்கள்.

சிறுகூடல்பட்டி மணிச் செட்டியார் அவர்களின் நட்பால் அவர்களோடு கூட்டாக நாகப்பா சைக்கிள்மார்ட் நிறுவனத்தைத் தொடங்கினார்கள். அந்த நிறுவனம் பல்கிப் பெருகி இன்று பல கிளை, துணை நிறுவனங்களோடு பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது.

இலுப்பைக்குடிக் கோயிலைச்



மதுரைப் பெருநகர் காவல் துறை ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் அவர்களுக்கு மதுரையில் 8-7-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு வருகை தந்த ஆர்எம். முத்தழகப்ப செட்டியார் அவர்களுடன் திரு. எஸ்பி. முத்துராமன் செட்டியார், மற்றும் திரு. பழ. இராமசாமி, திரு. எம். சிஎன். மாணிக்கம் கலைமகள் திரு. நடராஜன் செட்டியார்.

சேர்ந்த இவர்கள் 1985ல் நடைபெற்ற அருள்மிகு சௌந்தர நாயகி அம்மன் உடனுய தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருக்குடநன்னீராட்டு விழாவின் பொருளாளராக இருந்து சிறந்த சேவை செய்தார்கள்.

கோனுபட்டு நகரச் சிவன் கோவிலின் திருப்பணிக் குழுவில் துணைத்தலைவராக இருந்து அக் கோயிலின் குடநீராட்டு 29-4-90 அன்று நடைபெறப் பெரிதும் உதவியாக இருந்தார்கள். ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் செயலாளராகக் கடந்த 18 மாதங்களாக அரும்பணியாற்றி வந்தார்கள்.

''நகரத்தார் குரல்'' இதழின் ஆலோசனைக் குழு உறுப்பினரான இவர்கள் அதன் வளர்ச்சிக்கு நாளும் பாடுபட்டார்கள். நம் சமூக இதழ்கள் பொதுவாக நீண்ட நாட்கள் வெளிவருவதில்லை என்றும் அதை மாற்றி ''நகரத்தார் குரல்'' நம் சமூகம் இருக்கும் காலம் வரை தொடர்ந்து வெளிவந்து நம்மவர்களுக்குப் பயன்தர வேண்டும் என்பதில் மிக அக்கறை கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மாதமும் ''நகரத்தார் குர'' லைப் படித்துவிட்டு தமது கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அதில் பாராட்டே அதிகம் இருக்கும்.


பணமும் மனமும் ஒன்று சேருவது அபூர்வம் என்பார்கள். முத்தழகப்ப செட்டியார் அவர்களைப் பொறுத்தவரை அது பொய்யாகும். இவர்கள் நல்ல காரியங்களுக்கு மனமுவந்து உதவினுர்கள். சமயப்பணி, சமூகப்பணி, திருப்பணி யாவற்றிலும் ஆர்வத்தோடு செயல் பட்டார்கள். விருந்தோம்பலில் சிறந்து விளங்கினுர்கள். 'உழைப்பால் உயர்ந்தவர்' என்பதற்கு இவர்கள் ஓர் எடுத்துக்காட்டு.

இவர்களது 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா கோனுபட்டில் 12-6-86 அன்று நாடோர் போற்ற சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இவர்கள் 29-4-88 முதல் 24-6-88 வரை - 57 நாட்கள் சிங்கப்பூர், மலேஷியா, ஹாங் காங், பாங்காக், ஜப்பான், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குத் தம் துணைவியாரோடு சுற்றுப் பயணம் சென்று வந்தார்கள்.

இவர்களுக்கு திருமதி மீனுட்சி ஆச்சி என்கிற மனைவியும் திரு. நாகப்பன் திரு. இராமசாமி என இரு புதல்வர்களும் திருமதி முத்தாத்தாள் நாச்சியப்பன் திருமதி மீனுள் அழகப்பன் என இரு புதல்விகளும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
1-8-1906

மறைவு :
1-10-1989

திரு. N. S. S. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்

கண்டவராயன்பட்டி

ஸ்தாபகர் : N. S. S. சொக்கலிங்கம் செட்டியார் & Co.

ஈரோடு-1

கலசா காப்பி எஸ்டேட்

கலசா, கர்நாடகா மாநிலம்

அபிராமி 70 M. M. A/c

தேவி அபிராமி A/c தியேட்டர்ஸ்

ஈரோடு-11

உழைப்பையே உயிர்மூச்சாகக் கொண்டு
கடமையை இரண்டு கண்களாகக் கொண்டு
காலமெல்லாம் உழைத்திட்ட காவலரே!
உங்களுக்கு எங்கள் நினைவு அஞ்சலி.

இப்படிக்கு - மகன்கள்

So. சிவசுப்பிரமணியம்

N. S. S. செந்தில்நாதன்



நீதிபதி திரு. அரு. லெட்சுமணனுக்கு சென்னை வடபழனி நகரத்தார் நற்பணி மன்றத்தின் சார்பாக 5-8-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் (இடமிருந்து வலமாக) திரு. பழ. கருப்பையா, திரு. வி. என். சிடி. நீதிபதி திரு. அரு. லெ. திருமதி மீனாட்சி லெட்சுமணன்.

சைக்கிள் பேரணித் தொண்டர்களுக்குப் பாராட்டு விழா

மதுரை நகரத்தார் புத்தக வங்கியைச் சேர்ந்த இளைஞர்கள், புத்தக வங்கியின் தலைவர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமியின் தலைமையில் 76 நகரத்தார் ஊர்களுக்கும் 4-6-90 முதல் 10-6-90 வரை சைக்கிள் பேரணியாகச் சென்று போக்குவரத்து வசதி, வங்கிகளில் தொழில் தொடங்கக் கடன் வசதி, கல்வி வசதி ஆகியவற்றிற்கு விரைவாக ஏற்பாடு செய்து உதவியதைப் பாராட்டும் விதமாக மதுரை நகரத்தார் சங்கம் 21-7-90 அன்று சங்கத்தின் துணைத் தலைவர் கலைமகள் திரு. இராம. நடராசன் செட்டியார் அவர்கள் தலைமையில் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழாவை நடத்தியது.

பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வரவேற்றுப் பேசினார் கலைமகள் திரு. இராம. நடராசன் செட்டியார் தலைமை உரையாற்ற தியாகராசர் கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் திரு. எஸ். சொக்கலிங்கம், கனரா வங்கியின் மேலாளர் திரு. இராம. வீரப்பன் நகரத்தார்இளைஞர் சங்கத்தின் கௌரவத் தலைவர் திரு. எம். சிஎன். மாணிக்கம் ஆகியோர் பாராட்டிப் பேசினர்கள்: வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி ஏற்புரை நல்கினர்.

மயக்கமா? தயக்கமா?

இராம. சுப்பையா

நகரத்தார் சமூகம்
பண்பாலும்
பழக்க வழக்கங்களாலும்
பெருமைபெற்ற சமூகம்.

நம் சமூகத்திற்கென்று
சில மரபுகள் உண்டு.

நம் சமூகத்தார் செய்துள்ள
திருப்பணிகளே
இன்று நம்மைக்
கவசமாகக்
காத்துவருகின்றன.

நம்பிக்கை, நாணயம், நேர்மை
இவைதான்
நம் சமூகத்தின்
மூச்சுக்காற்று.

இப்படிப்பட்ட
உயர்ந்த சமூகத்தின்
இன்றையநிலை என்ன..?

காலத்திற்கு ஒவ்வாத
சில பழக்கவழக்கங்களைக்
கட்டிப்பிடித்துக்கொண்டு
திசைதெரியாமல் நாம்
பயணம் செய்கிறோம்.

மாறிவரும் காலப்போக்கை
உணர்ந்தால்தான்
எந்த ஒரு சமுதாயமும்
முன்னேறும்.

பெண்கள், சமுதாயத்தின்
கண்கள்.

அப்படிப்பட்ட பெண்களைப்



ஒக்கூர் சி. கரு. சி. கரு. ஆத. கருப்பஞ் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமநாதனுக்கும் பொன். புதுப்பட்டி மு. பெ. மு. சே. பெரியண்ணன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி உண்ணு மலைக்கும் 3-9-90 அன்று பொன். புதுப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

பெற்றதே பாவமென்று
கைபிசைந்து
நிற்கின்றோம்.

வயதுக்கு வந்துவிட்ட
பெண்ணைப் பார்த்து
'இவளை எப்படிக்
கட்டிக்கொடுப்பது'
என்று
கதிகலங்கி நிற்கின்றோம்.

பிறந்தது பெண்குழந்தை என்றால்
குழந்தைக்குப் பதிலாக
நாமே அழுகின்றோம்.

நகை என்றும்
பணமென்றும்
சீர்வரிசைச் சாமான் என்றும்
கொட்டிக் கொடுத்துப்
பெண்ணைக் கட்டிக்
கொடுக்கின்றோம்.

அதன் பிறகும்
அடுத்தடுத்து
எத்தனையோ முறைகள்.

ஒவ்வொரு பெண்ணைப்
பெற்றவர் வீட்டிலும்
ஒரு 'அலாவுதீன் பூதம்'
இருக்க வேண்டும்.

அப்போதுதான்
மாப்பிள்ளை வீட்டாரின்
பேய்ப்பசி அடங்கும்.

வசதியும் வாய்ப்பும்
இல்லாத காரணத்தால்
எத்தனையோ பெண்கள்
திருமணத்தை எதிர்பார்த்து
ஏக்கப் பெருமூச்சோடு
காத்திருக்கிறார்கள்.

திருமணம் என்பது
வாழ்க்கையின் வசந்தம்.

அந்த வசந்தம்
இந்த அபலைப் பெண்களை மட்டும்
அனலாய்ச் சுடுவது ஏன்..?

இதற்கெல்லாம் ஒருமுடிவு
கட்ட வேண்டும்.

இல்லாவிட்டால்
இந்தப் பெண்களின்
கண்ணீருக்கு
நாம் கொடுக்கும் விலை
மிக அதிகமாக இருக்கும்.

காலம் வேகமாக
மாறிக்கொண்டிருக்கிறது.

யார் முதல் அடியை எடுத்து
வைப்பது
என்று
மயங்காமல்
தயங்காமல்
துணிவுள்ள ஒரு சிலர்
முன்வந்தால்
நம் சமுதாயத்தின் மீதுள்ள
பழி நீங்கும்.

முன்வருவார்களா..?

துவார் வள்ளிலிங்கம் கோயில் கூட்டம்

துவார் கோயிலில் வழிபடும் நகரத்தார் பெருமக்களின் கூட்டம் புதுக்கோட்டை விஜய் ஓட்டலில் 9-9-90 அன்று மாலை பூலாங்குரிச்சி திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது கோயில் சீரமைப்புக்கு திரு. எம். எஸ். சொக்கலிங்கம் செட்டியார் தலைவராகவும் திரு. ப. வ. ராம. பழ. குழ. இராமைய்யா செட்டியார், திரு. பழநியப்பன் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

கோயில் சீரமைப்பு தொடர்பாக பூலாங்குரிச்சியில் திரு. எம். எஸ். சொ. அவர்களது இல்லத்தில் 12-10-90 அன்று மீண்டும் கூடிப் பேசி முடிவு மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப் பெற்றது.

சதாபிஷேகம்

பட்டமங்கலம் வீர. நா. கருப்பன் செட்டியார் அவர்களுக்கும் திருமதி கரு. பார்வதி ஆச்சி அவர்களுக்கும் 22-8-90 அன்று இராமேஸ்வரம் நகர விடுதியில் சதாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி அண. ஜான்சிராணி மதுரை நாக மலை சிறுபாலர் பெண்கள்மேனிலைப் பள்ளியில் 1989-90ல் 10 ஆம் வகுப்புப் படித்து கடந்த ஏப்ரல்' 90ல் நடைபெற்ற பொதுத் தேர் வில் 500க்கு 447 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார்.


இவர் பாகனேரி திரு. இராம. அண்ணாமலைச் செட்டியார் - திருமதி அண. சரோஜா ஆச்சியின் புதல்வியாவார். தற்போது மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியையாகப் பணியாற்றி வரும் திருமதி கவிதாராணி இவரது மூத்த சகோதரியாவார்.

இவர் தன் தமக்கையைப் போல பள்ளிகளில் நாடகங்களி லும், பேச்சுப் போட்டிகளிலும், கவியரங்கங்களிலும் கட்டுரைப் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இவர் இந்தியில் பிராத்மிக்கில் 85% மதிப்பெண்கள் பெற்று தற் போது மத்திமா தேர்வும் எழுதி



முடித்து அடுத்து ராஷ்ட்ரபா... வும் கற்று வருகிறார். இசைத் துறையிலும் ஆர்வம் உள்ள இவ...



ஒக்கூர் வீர. ராம. சித. ராம. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சிதம்பரம் என்கிற சுந்தரம் D C.Eக்கும் கீழப் பூங்குடி கூ. க. வயி. சொ. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி சிவகாமி என்கிற உமாவிற்கும் 6-9-90 அன்று கீழப்பூங்குடியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வயலின் கற்று வருகிறார்.

தற்போது ஸ்டேட் பாங்க் ஆபீஸர்ஸ் அசோஸியேஷன் மேனிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வரும் செல்வி அண. ஜான்ஸிராணியின் திறமைகளைப் பாராட்டுகிறோம்.

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதி: சாப்பாட்டுக் கூடத் திறப்பு விழா!

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள சாப்பாட்டுக் கூடத்தின் திறப்பு விழா 30-7-90 அன்று கோலாகலமாக நடைபெற்றது.

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதிக் கட்டிட விஸ்தரிப்புக் குழுவின் தலைவர் 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்றுப் பேச, அறமனச் செம்மல் சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் தொழிலதிபர் திரு. வயி. அழ. சின்ன அழகப்பன் திருவிளக்கேற்றிவைக்க 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் சாப்பாட்டுக் கூடத்தைத் திறந்து வைத்தார்கள்.

சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்ற திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. வயி. அழ. சின்ன அழகப்பன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார், திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார், டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் 'கூசிஷு' திரு. அரு. சோமசுந்தரன், திரு. அரு. நாகப்பன், பேராசிரியர் திரு. ச. மெய்யப்பன், திரு. இராம. ஏகப்பன், திரு. ஏஎல். எஸ். அழகப்பன் திரு. பழ. கருப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இவ்விழாவில் திருமுறைச் செல்வர் பாகனேரி இராம. முத்துப் பழநியப்ப செட்டியார் அவர்களுக்கு 'அறமனச் செம்மல்' நாகராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்கள்.

சாப்பாட்டுக் கூடத்தைக் குறைந்த செலவிலும் குறுகிய காலத்தில் சிறந்த முறையிலும் கட்டிக் கொடுத்த பொறியாளர் காரைக்குடி திரு. எஸ். சுப்பிரமணியன் செட்டியாருக்கு 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் 'கட்டிடக் கலைச் செம்மல்' என்ற பட்டத்தினை வழங்கி பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். ஆத்தங்குடி விகடம் காசிச் செட்டியார் அவர்கள் ஆசி கூறினார்கள்.

திரு. வெஸ்ட் வயிரவன் செட்டியார் நன்றி கூறினார்.

இவ்விழாவில் 'இரசிகமணி' இராம. சித. வின் துணைவியார் திருமதி முத்தம்மாள் ஆச்சிக்கு திரு. ஏஎல். எஸ். அழகப்பனின் துணைவியார் திருமதி சகுந்தலா ஆச்சி பொன்னாடை போர்த்தினார்கள்.

தர்மம் தலைகாக்கும்

''நான் தர்மம் செய்கிறேன்'' என்று கூறுவதே தவறு. இறைவன் தந்த பணத்தைக் கொடுக்கும் போது ஈடுபாட்டோடு கொடுக்க வேண்டும். ஈடுபாட்டோடு செய்கிற தர்மம் 5 ரூபாயானாலும் அது ஒரு கோடி ரூபாய் பெறும்.

- ஏஎல். எஸ். அழகப்பன்

(பட்டினத்தடிகள் திருவிழாவில்)

உங்கள் குரல்

செப்' 90 ''நகரத்தார் குரல்'' இதழ், 40 பக்கங்களும் நல் முத்துக்கள். ஆனாலும் ஓர் குறை. எங்கள் குரலைத் தேடினேம். காணவில்லை !

— சேது. அருணசலம்
தேவகோட்டை

நான் ''நகரத்தார் குர'' லின் தொடக்க காலம் முதல் உறுப்பினர். இதழ் ஒவ்வொரு மாதமும் தவருமல் கிடைத்து வருகிறது. இதழ்களில் நல்ல விஷயங்கள் பொதிந்துள்ளன. மாத இதழை மாதம் இருமுறை இதழாக மாற்ற வேண்டியது அவசியம்.

— கே. ஏ. சிதம்பரம்
பொள்ளாச்சி

நம் சமூகத்தைப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி. உண்ணுவிரதப் போராட்டம் நடத்திய மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தினருக்குப் பாராட்டுக்கள். அச்சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சொக்கலிங்கம் அறிவித்துள்ள மூன்று கட்டப் போராட்டத்திற்கு நம்மவர்கள் ஆதரவு நல்க வேண்டும்.

— கனகு சுப்பு, கல்யாணம்
நன்னிலம்

மதுரையில் நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் நடத்திய உண்ணு விரதப் போராட்டத்தைப் போல தமிழக முக்கிய நகரங்களில் நடத்தினல் பிரச்னையை அரசுக்கு மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிவிக்கவும் அவர்களது ஆதரவைப் பெறவும் வாய்ப்பாக அமையும்.

'ப்ளோரா' பழனிக்குமார்
கண்டவராயன்பட்டி

அண்ணல் காந்தியடிகள் வழங்கிய அற்புதப் போராட்ட முறைகளில் ஒன்று உண்ணு நோன்பு. அகிம்சையின் அடிப்படையில் சத்தியாக்கிரகம் செய்வதுதான் உண்ணு நோன்பு. அந்த முறையில் மதுரையில் நகரத்தார் இளைஞர் சங்கம் நடத்திய உண்ணு நோன்பு பற்றிய செய்திகளை விரிவாக சிறப்பாக வெளியிட்டுள்ள குரலுக்குப் பாராட்டுக்கள் கல்வித் துறையில் நகரத்தார் மாணவர்களுக்கு பெரும் சலுகைகள் கிடைக்க இந்த உண்ணு நோன்பு வழி வகுக்கட்டும்.

அ. வல்லநாட்டான்
கண்டவராயன்பட்டி

''நகரத்தார் குரல்'' நம் சமூக முன்னேற்றத்திற்கு நல்ல பல செய்திகளை வெளியிட்டு சிறந்த தொண்டாற்றுகிறது. வாழ்க. வளர்க.

வி. நாராயணன்
காரைக்குடி

செப்' 90 ''நகரத்தார் குர,'' லில் திரு. ஆர். சொக்கலிங்கம் எழுதிய 'உண்ணு விரதம் எதற்காக?' கட்டுரையும் 'பூனைக்கு யார் மணிகட்டுவது' என்ற மணி வண்ணனின் மடலும் மற்றும் உண்ணு விரதப் போராட்டச் செய்திகளும் மிகவும் சிறப்பாக இருந்தன.

ஆத்தங்குடி
ராம. நாச்சியப்பன், நாகபட்டினம்

விளம்பரத்தில் திருத்தம்

''நகரத்தார் குரல்'' செப்' 90 இதழில் 8 ஆம் பக்கத்தில் வெளியிடப் பெற்றுள்ள 'மணமகள் தேவை' என்ற விளம்பரத்தில் மணமகன் வயிரவன் கோவிலைச் சேர்ந்தவர் என்ற வாசகம் விடுபட்டிருக்கிறது. அதைச் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறேம்.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் திரு. இராம. முத்தையா, புதுடில்லி இடைநிலைக் கல்விக்கான மத்தியக் குழு (CBSE) 1989 மே மாதம் நடத்திய நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு செய்யப் பெற்ற 1600 பேரில் 1396 ஆவது இடத்தைப் பெற்று சென்னை மருத்துவக் கல்லூரியில் முதலாம் ஆண்டு M.B.B.S படித்து வருகிறார்.

இம்மாணவர் 1988மே மாதம் நடந்த பிளஸ்டு பொதுத் தேர்வில் இயற்பியலில் 200க்கு 192 மதிப் பெண்களும் வேதியியலில் 200க்கு 186 மதிப்பெண்களும் உயிரியலில் 200 க்கு 166 மதிப் பெண்களும் பெற்றுத் தேர்ச்சியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாணவர் இந்தியன் வங்கியில் பணிபுரியும் ஆத்தங்குடியைச் சேர்ந்த திரு. ஏஆர். இராமசாமி -



திருமதி மீனாள் இராமசாமியின் புதல்வராவார்.

இம் மாணவரின் திறமையைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

புத்தகவங்கியின் கருத்தரங்கம்

மதுரை நகரத்தார் புத்தக வங்கி சார்பாக அதன் செயலாளர் திரு. தி. சண்முகசுந்தரம் தலைமையில் 15-7-90 அன்று பிரேம் நிவாஸ் ஓட்டலில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

நகரத்தார் புத்தக வங்கியின் தலைவர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி அக்கருத்தரங்கினைப் பற்றி விளக்கினர்.

கோவிலூரரைச் சேர்ந்த திரு. இராமன் சுவாமிகள் அக் கருத்தரங்கில் தன்னம்பிக்கையை வளர்ப்பது எப்படி, மனதை ஒரு நிலைப்படுத்துவது எப்படி, இலட்சியத்தை அடைவது எப்படி, மனச்சோர்வை நீக்குவது எப்படி போன்ற தலைப்புகளில் உரையாற்றினார்.

அன்று மாலையில் தன்னம்பிக்கை தேவைதானா, இலட்சியம் இன்றியமையாததா, மனதை ஒரு நிலைப்படுத்தல் அவசியம் தானா, மனச்சோர்வை நீக்குவது சாத்தியமா போன்ற கேள்விகளில் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் நடைபெற்றன.

ஆழ்நிலைத் தியானம், ஞாபகசக்தியை வளர்ப்பது, போன்ற தலைப்புகளில் மேலும் கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடு செய்யப்படும் என்று வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி கூறினர்.

சுவாமிகளின் பாராட்டுக்களோடும், செயலாளரின் நன்றியோடும் விழா நிறைவு பெற்றது.




பலவான்குடி நகரச் சிவன் கோவிலின் திருக்குட நீராட்டு விழா சிறப்புடன் நிறைவேற அரும்பணியாற்றிய பலவான்குடி நகரத்தார் நற்பணி மன்றத் தலைவர் ப. வ. ச. வயிரவன் செட்டியார் அவர்களுக்கு சு. அரு. பழநியப்ப செட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் காட்சி.


சிறந்த சலவைக்கு
சுந்தரம் சோப்
SUNDARAM SOAP WORKS.
15, ANUPPANADI VAIKAL STREET, MADURAI-9.
REGD No. 286307
SUNDARAM
DETERGENT CAKE
Manufactured by
SUNDARAM SOAP WORKS
MADURAI-9
SUNDARAM

சண்முகம் செட்டியார் இயற்கை எய்தினர்

கோவை சௌத் இந்தியா கார்ப்பரேஷனின் உயர் அதிகாரி திரு. லெ. சண்முகம் செட்டியார் தமது 64ஆவது வயதில் 2-9-90 அன்று ஆறுமுகநேரியில் நெஞ்சு வலி ஏற்பட்டு இயற்கை எய்தினர் அவரது பூத உடல் அவரது சொந்த ஊரான உ. சிறுவயலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு எரியூட்டப் பெற்றது.

திரு. சண்முகம் செட்டியார் தமது 19 ஆவது வயதிலிருந்து



செட்டி நாட்டு அரசர் குடும்ப நிறுவனங்களில் பணியாற்றி வந்தார். ராஜா சர் அண்ணுமலேச் செட்டியார், ராஜா சர் முத்தையவேள், திரு. மு. அ. மு. இராமசாமி ஆகிய மூவர் உள்ளங்களிலும் தமது அயரா உழைப்பால் உயர்ந்து நின்ருர். ராஜா சர் அண்ணமலேச் செட்டியார் காலத்தில் கொச்சின் திரு. நாச்சியப்ப செட்டியாரிடமும் கருங்குளம் திரு. ராம. ரெங்கநாதன் செட்டியாரிடமும் பணிகளேக் கற்றுக் கொண்டார்.

இவரது 60 ஆம் ஆண்டு நிறைவு மணி விழா 20-5-87 அன்று கோவையில் நடைபெற்றது.

இவரது தந்தையார் லெட்சுமணன் செட்டியார் அவர்கள் ராஜாசர் அண்ணுமலேச் செட்டியார் அவர்களின் பிரதிநிதியாகச் செய் கோனில் பணியாற்றியவர். செட்டிநாடு சிமிண்ட் நிறுவனத்தின் உயர் அதிகாரி திரு. சபாரத்தினம் இவரது சகோதரர் ஆவார்.

திரு. சண்முகம் செட்டியாருக்கு மனேவி திருமதி வள்ளியம்மை ஆச்சியும் மூன்று புதல்வர்களும் இரண்டு பெண்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

திருவிளக்குப் பூஜை

காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில் நான்காம் ஆண்டாக 8 ஆம் திருநாள் (3-8-90) வெள்ளிக்கிழமையன்று மாலே 6 மணி அளவில் நகர விடுதியில் திருவிளக்குப் பூஜை சிறப்பாக நடைபெற்றது. ஒன்பது நகரக் கோயில்களேயும் சேர்ந்த 108 சுமங்கலிப் பெண்கள் இதில் கலந்து கொண்டனர்.

இவர்கள் முதலில் விடுதியிலிருந்து புறப்பட்டு பல்லவனீச்சரக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து தீர்த்தம் பெற்றுத் திரும்பினர்.

திருவிளக்குப் பூஜையின் முதல் விளக்கை வேந்தன்பட்டி திரு. குழந்தையன் செட்டியாரும் திருமதி சேது ஆச்சியும் ஏற்றித் தொடங்கி வைத்தார்கள்.

'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களும் மற்ற மெய்யன்பர்களும் திருவிளக்குப் பூஜை சிறப்புற நடைபெற உதவினர்.


கர்நாடக மாநிலம் நகரத்தார் சங்கம்

கார்நாடக மாநிலம் நகரத்தார் சங்கத்தின் 8 ஆம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் 5-8-90 மாலை திரு. எம். ஏஎல். முத்தையா தலைமையில் நடைபெற்றது. அப்போது புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நடுவராக இருக்க ''சமுதாயத்தில் ஆடவர்க்கே முதலிடம் என்பது குற்றம்'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. திருமதி அலமேலு கவிஞர் திரு. சேது அருணசலம் பங்கு பெற்றனர்.

இக்கூட்டத்தில் 1990-91 91-92 ஆம் ஆண்டுகளுக்கு திரு. எம். ஏஎல். முத்தையா தலைவராகவும் திரு. ஏஎல். எஸ். காசிச் செட்டியார் திரு. பிஆர். சொக்கலிங்கம், திரு. சி. வள்ளியப்பா ஆகிய மூவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. ஆர். சுப்பிரமணியன் பொதுச் செயலாளராகவும் திரு. எம். வி. அருணசலம் திரு. எஸ். பெரிச்சியப்பன் இருவரும் இணைச் செயலாளர்களாகவும் திரு எஸ். இராமையா பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

எழுத்தாளர் சங்கம்

அகில இந்திய எழுத்தாளர் சங்க மகாநாடு 15-9-90 அன்று காரைக்குடியில் திரு. வாசவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. திரு. சித. சிதம்பரம் அண்ணா படத்தினைத் திறந்து வைத்தார். 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் கவியரங்கத்தினைத் தொடங்கி வைத்தார். ஏராளமான எழுத்தாளர்கள் பங்கு பெற்றனர்.



தமிழ்நாடு ஜனதா தளத்தின் தலைவர் 'நடிகர் திலகம்' திரு. சிவாஜி கணேசனின் இல்லத்திற்கு பாரதத் தலைமை அமைச்சர் மாண்புமிகு வி. பி. சிங். அவர்கள் 23-9-90 அன்று சென்றிருந்த போது நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிய காட்சி.

வாழ்வுக்கு வழிகாட்டும்... மூன்று

விரும்ப வேண்டியவை மூன்று :
தூய்மை, நேர்மை, உழைப்பு,

மதிக்க வேண்டியவை மூன்று :
முதுமை, மதம், சட்டம்.

கட்டுப்படுத்த வேண்டியவை மூன்று :
நா, உணர்ச்சி, இச்சை.

கவனிக்க வேண்டியவை மூன்று :
பேச்சு, நடத்தை, செயல்.

பாராட்ட வேண்டியவை மூன்று :
அழகு, அறிவு, குணம்.

காப்பாற்ற வேண்டியவை மூன்று:
செல்வாக்கு, நட்பு, பற்று.

ஒழிக்க வேண்டியவை மூன்று :
சோம்பல், பொய், புறங்கூறல்.

-- வி. ஆர். சின்ன அருணாசலம்
தேவகோட்டை.

நிர்வாகிகள் தேர்வு

திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அப்போது திரு. எஸ்பி. இராமசாமி தலைவராகவும் திரு. கே. ஆர். சிதம்பரம் துணைத் தலைவராகவும் திரு. சி. கல்யாணகிருஷ்ணன் செயலாளராகவும் திரு. ஆர்எம். பழநியப்பன் துணைச் செயலாளராகவும் திரு. என். மோகனசுந்தரம் பொருளாளராகவும் கௌரவ ஆலோசகர்களாக ஐந்து பேரும் செயற்குழுவில் பத்துப் பேரும் நிதிக் குழுவில் ஐந்து பேரும் தேர்வு செய்யப்பெற்றனர்

கோவை இளைஞர் சங்கம்

கோயமுத்தூர் நகரத்தார் இளைஞர் சங்கம் நம்மினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் 160பேருக்கு 1990ஆம் ஆண்டுக்கு கல்விக்கு உதவித் தொகையாக ரூ. 7500/- வழங்கியுள்ளது.

விருத்தாசலம் சங்கம்: நிர்வாகிகள் தேர்வு

விருத்தாசலம் நகரத்தார் சங்கத்தின் 10ஆவது ஆண்டு விழா திரு. சுப. நாச்சியப்ப செட்டியார் தலைமையில் 29-7-90 அன்று நடைபெற்றது. அப்போது திரு. பழ. கருப்பையா சிறப்புரை யாற்றினர்.

நடப்பு ஆண்டிற்கு திரு. ராம. செல்லப்ப செட்டியார் தலைவராகவும் திரு. நா. கனக சபை செட்டியார் துணைத் தலைவ ராகவும் திரு. நா. முத்துராமன் செட்டியார் செயலாளராகவும் திரு. எஸ். அண்ணமலை செட்டி யார் பொருளாளராகவும் மற்றும் 11பேர் செயற்குழு உறுப்பினர் களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

திருவனந்தபுரம் சங்கத்தின் நன்கொடை

நம் சமூகத்தில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் களின் திருமணத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 301-00 வீதம் இரண்டு திருமணங்களுக்கு நன் கொடை அளிக்க தமது சங்கம் முடிவு செய்திருப்பதாகவும் அது போல் முதல் நன்கொடையை அலவாக்கோட்டையைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு 5-7-90 அன்று அளித்திருப்பதாகவும் திருவனந்த புரம் நகரத்தார் சங்கத்தின் செய லாளர் பொறியாளர் திரு. எஸ். கணபதி தெரிவித்திருக்கிறர்.

திருமணம்

காரைக்குடி நா. மெய்யப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் வள்ளியப்பன் என்ற கண்ணன் M. Sc., D.B A M B.A க்கும் புதுவயல் மெ. வீர. மெ. ந. மெய்யப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி சிவகாமி M A க்கும் புதுவயலில் 7-9-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற் றது.

ஃ ஃ ஃ

கொப்பனுபட்டி மு. ப. மு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பேரனும் ராம. சேதுராமன் செட்டி யார் அவர்கள் புதல்வனுமான செல்வன் முருகப்பன் B. A க்கும் கோட்டையூர் க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் அவர் கள் பேத்தியும் ராம. முத்தையாச் செட்டியார் அவர்கள் புதல்வியு மான செல்வி சாரதா (B Sc)க் கும் கோட்டையூரில் 7-9-90 அன்று திருமணம் சிறப்பாக நடை பெற்றது.

மணி விழா

வேந்தன்பட்டி திரு. ஏ. பெரி. மாணிக்கம் செட்டியார் - திருமதி அன்னபூரணி ஆச்சியின் மணி விழா 30-8-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. மணி விழாவை ஒட்டி நிகழ்ந்த கவியரங்கிற்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்த ரன் தலைமை தாங்கினர்.

திரு. எஸ். குமரப்பன் வர வேற்ருர். புலவர் இராம. வீரப் பன், கவிஞர் மீனவன், கவிஞர் சிவல்புரி சிங்காரம், டாக்டர் சபா. அருணசலம் கவிஞர் சோம. சிவப் பிரகாசம் ஆகியோர் கவிபாடினர். திரு. சி. வள்ளியப்பன் நன்றி கூறினர்.

அட்டைப் படம் அன்பளிப்பு : 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோ.

சேதுக் கடலில் மிதவைப் பாலம்!

இராமர் சேதுபாலம் கட்டிய காலத்தில் குரங்குகள் மலைக்கற்களைக் கொண்டுவந்து கடலில் போட்டபொழுது அவை நீரில் மூழ்கி விட்டன. பாலம் கட்ட முடியவில்லை. பிறகு திருவருள் உடைய நளன் என்ற குரங்கை அழைத்து இராமபிரான் பாலம் கட்டச் சொன்னார். குரங்குகள் அனைத்தும் தாம் கொண்டுவந்த மலைக்கற்களை நளன் கையில் கொடுக்க அவன் வாங்கிக் கடலில் வைத்தபொழுது அவை மூழ்காமல் மிதந்தன. அவற்றைச் சீராக அடுக்கி ஒரு மிதவைப் பாலத்தை அற்புதமாக நளன் கட்டி முடித்தான். இப்பொழுது காசியில் கங்கையில் ஒரு மிதவைப் பாலம் காணலாம். அது போன்ற ஒரு பெரிய மிதவைப் பாலம் சேதுக்கடலில் அக்காலத்திலேயே கட்டப் பெற்றது.

மற்றவர்கள் போட்ட கற்கள் கடலில் மூழ்கியபொழுது நளன் போட்ட கற்கள் மட்டும் மிதக்கக் காரணம் என்ன என்று இராமபிரான் கேட்டதற்கு நளன் கூறிய பதில் வருமாறு:

''நான் சிறு குழந்தையாக இருந்தபொழுது என் தகப்பனார் சிவபூசை செய்த நேரங்களில் அவர் கண்களை மூடிக் கொண்டு பூசை செய்த வேளையில் சிவலிங்கத்தைக் கிணற்றில் போட்டு விடுவேன். அவர் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சிவலிங்கம் தேடும்படி செய்து வந்தேன். அதனால் வருந்திய அவர் வருணனை நோக்கித் தவம் செய்து வருணனிடம் ஒரு வரம் பெற்றார். அதாவது நான் எதைத் தண்ணீரில் போட்டாலும் அது மூழ்காமல் மிதக்க வேண்டும் என்பதே அவர் கேட்ட வரம். அதன்படி நான் பிறகு கிணற்றில் போட்ட சிவலிங்கம் மிதக்கத் தொடங்கியது. என் தந்தையார் சிரமமின்றி அதனை எளிதில் எடுத்துச் சிவபூசை செய்யலானார். அன்று பெற்ற வரத்தின் திருவருளினால் என் கைராசி எதைத் தண்ணீரில் போட்டா லும் அது மிதக்க வைக்கிறது. அதனால் மிதவைப் பாலம் கட்ட முடிந்தது'' என்றான் நளன்.

எனவே எதையும் கைராசி உடையவர்களைக்கொண்டு காரியம் செய்விக்க வேண்டும்.

— காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்

(காவிரிப்பூம்பட்டினத்தில் 2-8-90 அன்று நடைபெற்ற பேரவை நிகழ்ச்சியில்)

உலகத்திலேயே சிறந்த நூல்கள்!

''இப்படித்தான் வாழ வேண்டும்'' என்று காந்தியடிகள் எழுதிய நூலும் ''வனவாசம்'' என்று கவியரசு கண்ணதாசன் எழுதிய நூலும் உலகத்திலேயே மிகச் சிறந்த நூல்களாகும்.

— அரு. நாகப்பன்

(காரைக்குடியில் ஒரு திருமண விழாவில்)

திருப்பரங்குன்றத்திற்கு பால்குடம், காவடி

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் எட்டாவது ஆண்டாக ஆவணிக் கார்த்திகையை முன்னிட்டு 9-9-90 அன்று மதுரை நகர விடுதியில் 9 காவடிகள் கட்டப் பெற்றன. திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் விநாயகப்பானை வைத்தார். திரு. சிக. அரு. சோம. இராமநாதன் செட்டியார் பிள்ளைப் பானை வைத்தார். முனைவர் திரு. சுப. அண்ணாமலை வேலுக்கு அபிஷேகம் செய்தார். விநாயகப்பானை வேல் அபிஷேகங்களில் கலந்து கொண்டவர்களுக்கும் விசேடத்திற்குத் தேவையான சாமான்களை இவ்வாண்டு அன்பளிப்பாக வாங்கித் தந்தவர்களுக்கும், முருக பஜனையில் பாடிச் சிறப்பித்தவர்களுக்கும், மதுரை நகர விடுதிக்கு பெரிய கற்பகப் பிள்ளையார் படம் பிரேம் செய்து நன்கொடையாகத் தந்துதவிய 'அன்பு ஜெராக்ஸ்' திரு. சோம. நா. சிதம்பரம் செட்டியாருக்கும் ஆண்டுதோறும் சிறந்த முறையில் முதல் நாள் இரவு எல்லோருக்கும் அன்னதானம் செய்து வரும் தேவகோட்டை திரு. வெ. நா. மு. ராம. இராமநாதன் செட்டியாருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றது.

மறுநாள் 10-9-90 அன்று காலை 7-25 மணிக்கு 10 பால்குடங்கள் கட்டப் பெற்றுப் பாதயாத்திரையாகச் சென்று திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய ஆண்டவர் சன்னதியில் காவடி பால்குடங்கள் செலுத்தப் பெற்றன. திரு. ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் வேல் எடுத்துச் சென்றார். பின்னர் திருப்பரங்குன்றம் நகர விடுதியில் நடந்த மகேஸ்வர பூஜையில் சுமார் 1000 பேர்களுக்கு அன்னதானம் வழங்கப் பெற்றது. அன்று திருப்பரங்குன்றம் நகர விடுதியில் சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள் முன்னிலையில் திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியாரால் 21 மங்கலப் பொருட்கள் ஏலம் விடப்பெற்றன. நகரத்தார் பெருமக்களும் ஆச்சிமார்களும் ஆர்வத்துடன் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

காவடி அமைப்பாளர் திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் செட்டியார் உறுதுணையாக இருந்து விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார்.

ஆச்சிகளும் கருத்தான சொற்களும்

நமது ஆச்சிமார்கள் பேசும் போது கருத்தான பல சொற்களைப் பயன்படுத்துகிருர்கள் 'ஆமக்கன்' என்பது 'ஆண்மகன்' ஆகும். 'ஆமக்கன்' என்பதை 'கைப்பிடி நாயகன்' எனவும் கூறலாம். 'பரவாயில்லை' என்பதை 'தாவி -லே' (Not bad) என்பார்கள். கல்யாணச் சாப்பாட்டை 'கைப் பிடிச் சோறு' என்பார்கள். சிலர் கோபத்தில் 'சீப்பட்ட மட்டை' என்பார்கள். 'சீ' என்பது இழிவுச் சொல்லாகும். 'புஷ்பவதி ஆகி விட்டாள்' என்று கூறுவார்கள். அது சரியில்லை. 'சமைந்து விட் டாள்' என்பதே சரியான சொல். பழைய சொற்களை, வாக்கியங் களை இழிவாகக் கருதக் கூடாது அவை பொருள் பொதிந்தவை யாகும்.

- பழ: கருப்பையா

(பட்டினத்தடிகள் திருவிழா வில்)

தேவகோட்டையில் கந்தர் சஷ்டி விழா

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகம் நடத்தும் கந்தர் சஷ்டி விழா இவ்வாண்டு 18-10-90 தொடங்கி 26-10-90 வரை நடைபெற உள்ளது.

முதல் நாள் நிகழ்ச்சியை மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி தொடங்கி வைக்கி ருர். கந்தர் சஷ்டி விழாக் கழகத் தின் இவ்வாண்டுத் தலைவர் வானதி திரு. ஏ. திருநாவுக்கரசு தலைமை உரையாற்றுகிருர். மாணவ, மாணவிகளுக்கு திரு வி. என். சிதம்பரம் செட்டியார் பரிசு வழங்கி உரையாற்றுகிருர். மற்றும் வாரியார் சுவாமிகள் திரு. சுகிசிவம் பங்கு பெறுகிருர்கள். விழா நிகழ்ச்சிகளுக்கான ஏற் பாட்டை வானதி திரு. ஏ. திரு நாவுக்கரசு ஆர்வத்துடன் கவனித்து வருகிருர்.

நவராத்திரி சஷ்டி விழா

கோட்டையூர் கோட்டை நாச்சி யம்மன் கோவிலில் நவராத்திரி சஷ்டி விழா 25-9-90 அன்று காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்த ரன் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது. பேராசிரியர் திரு. அய்க் கண் வரவேற்ருர். புலவர் இராம. வீரப்பன் கவிஞர் துரைசிங்கம், அரு. நாகப்பன் ஆகியோர் உரை யாற்றினர். பஜனையும் நடை பெற்றது.

திருமணம்

கொப்பனுபட்டி ஆ. நா. பழநியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி தெய்வானைக்கும் குழிபிறை வ. ஏ. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகப்பன் என்ற ஏகப்ப னுக்கும் கொப்பனுபட்டியில் 24-8-90 அன்று திருமணம் சிறப் பாக நடைபெற்றது.


மனநிறைவு தரும் திருவிழா

பட்டினத்தடிகள் திருவிழா ஏற்பாடு மனநிறைவைத் தருகிறது. திருவிழா நடக்கும் முறை என்னை அதிக நாட்கள் தங்கும்படி செய்திருக்கிறது. பழ. தெ. லெ. அருணசலம் செட்டியார் அவர்கள் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் புரியக் கூடிய வகையில் திருவிழா பற்றி எடுத்துச் சொல்கிருர்கள். அவர்களது பேச்சை ரசிக்கிறேன்.

மாமியார் சாமான் வாங்குவதற்குப் பணக்காரர்களே காராணம். நான் மாமியார் சாமான் வாங்காமல் என்னுடைய ஐந்து பையன்களுக்கும் திருமணம் செய்து வைத்திருக்கிறேன்.

- டத்தோ நாச்சியப்பசெட்டியார்

(பட்டினத்தடிகளின் 6 ஆம் திருநாள் பேரவை நிகழ்ச்சியில்)



சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட் மானேஜர் திரு. எல். சண்முகம் செட்டியார் அவர்கள் (ஒ.சிறுவயல்) 2-9-90 மாலை 3-30 மணிஅளவில் அகால மரணமடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிருேம். அன்னர் 1944லிருந்து ராஜாசர் அண்ணமலைச் செட்டியாரவர்கள், ராஜாசர் முத்தையாச் செட்டியாரவர்கள் டாக்டர் M. A. M. ராமசாமி செட்டியார் அவர்களிடத்தில் பணியாற்றி வந்துள்ளார்கள். அன்னரது தந்தையார் திரு. லெட்சுமணன் செட்டியார் என்ற சீனிவாசன் செட்டியாரவர்கள் ராஜாசர் அவர்களிடம் பர்மாவிலும் செய்கோனிலும் ஏஜெண்டாகப் பணியாற்றினர்கள். திரு. சண்முகம் செட்டியாருக்கு மனைவி ஸ்ரீமதி வள்ளியம்மை ஆச்சியும் மூன்று மகன்களும் இரண்டு மகள்களும் உள்ளார்கள். அன்னரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்

நிர்வாகம் மற்றும் அலுவலர்கள்

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்.

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: திருநெல்வேலி-627006 தொலைபேசி: 23474

நிர்வாக அலுவலகம்: பள்ளத்தூர்-623107 தொலைபேசி: 72 & 108

மத்திய அலுவலகம்: சென்னை-600 002
தொலைபேசி: 869344 & 867886

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான
ஒப்பற்ற சீட்டு நிறுவனம்

3 மாநிலங்கள் 60 அலுவலகங்கள் 43 ஆண்டு சேவை

நிதி நிலைமை 31-3-1990ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப் பெற்றது)

அதிகாரம் பெற்ற மூலதனம்	:	ரூ. 25.00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும்	:	ரூ. 27.65 ல[illegible]
ஆஸ்திகள்	:	ரூ. 31.23 [illegible]க்கு மேல்
சீட்டு நடைமுறை நிதி	:	ரூ. 35.[illegible] கோடிக்கு மேல்

டைரக்டர்கள்: AR. விஸ்வநாதன்
S. Pr. ராமஸ்வாமி M. A.

"எங்கள் 60 அலுவலகங்கள் மூலமாக பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒருமுறை, இருமுறை, சீட்டுக்கள் ரூ. 50,000/-வரை நடத்தி வருகின்றோம். மேலும் மாதம் ஒருமுறை ரூ. 50,000/- முதல் ரூ. 3,00,000/-வரை மதிப்புள்ள சீட்டுக்களை பிராந்திய குரூப்புக்களாக எங்கள் சென்னை மத்திய அலுவலகம், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, காரைக்குடி, பாண்டிச்சேரி கிளைகளிலும் ரூ. 5,00,000/- உயர் மதிப்புள்ள சீட்டை சென்னை மத்திய அலுவலகத்திலும் நடத்தி வருகின்றோம்.

Dr. L. RM. அருணாசலம் B. E., M. E., (PH) M. I. E.
பொது ஜனத் தொடர்பு அதிகாரி

AR. பழநியப்பன்
நிர்வாக அதிகாரி

RM. அருணாசலம்
நிர்வாக இயக்குநர்

Regd. No. TN/MA/(C)/106 NAGARATHAR KURAL